பக்கங்கள்: 12

# காலைக்கதிர்

Kalaikathir

விடியல் 03 வள்ளுவர் ஆண்டு 2050 ஆவணி 07 சனிக்கிழமை 24.08.2019 கதிர் 292

## இனி இது ரகசியம் அல்ல!

கேள்விஎழுப்புவதில்சட்டத்தரணிகள் சூரர்கள். அதுவும் ஜனாதிபதி சட்டத்தரணியான சுமந்திரன் அதில் அசகாய சூரர் போலும்.

கடந்த 24 மணிநேரத்தில் அவர் எழுப்பிய இரண்டு கேள்விகள் குறித்துக் கேள்விப்பட்டேன். அவற்றை இன்று வாசகர் பக்கம் 02

# காணாமற்போனோர் செயலகத்தை விக்கியும் கடுமையாக எதிர்க்கிறார்!



### மக்களை ஏமாற்றவேண்டாமென அவர் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஓக. 24

காணாமல்ஆக்கப்பட்டோர்அலுவலகத்தின் கடந்த கால செயற்பாடுகளைப் பார்க்கின்றபோதுதெளிவானஎந்தஇலக்குகளோ, காலஅட்டவணையோஅல்லதுகாணாமல் ஆக்கப்பட்ட மக்களின் உறவினர்களின் துயரங்களைப் போக்கும் எந்தப் பொறி முறைகளுமோ இன்றியேஅது செயற்பட்டு வருவதைக் காண முடிகிறது என அதன் குறைபாடுகளைசுட்டிக்காட்டியுள்ளார்தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகம் க.வி.விக்னேஸ்வரன். பக்கம் 11

# காணிகள் விடுவிப்பு குறித்து ஓகஸ்ட் 28 இறுதித் தீர்மானம்

### தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பாதுகாப்புத் தரப்பையும் இணைத்து மைத்திரி தலைமையில் முக்கிய கலந்துரையாடல்

கொழும்பு, ஓக. 24

வடக்கு– கிழக்கில் படையினர் வசமுள்ள காணிகள் விடுவிப்பு, புத்தர் சிலைகளை அமைத்தல், மகாவலி எல் வலயம், தொல்பொருள் திணைக்களம், வனவளத் திணைக்களம் ஆகியவற்றின் காணி அபகரிப்பு நடவடிக்கைகள், கன்னியா மற்றும் செம்மலை இந்துக் கோயில் விவகாரங்கள் ஆகியன தொடர்பில் இறுதித் தீர்மானம் மேற்கொள்ளும் கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 28ஆம் திகதி ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி மைத்திரிபால தலைமையில் இடம்பெறவுள்ளது. பக்கம் 11

## மஹிந்த தரப்புக்கு ஆதரவு வழங்காதீர்!

### மைத்திரியிடம் சந்திரிகா கோரிக்கை

கொழும்பு, ஓக. 24

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாகுமாரதுங்கவுக்கும் இடையே நேற்று முன்தினம் மாலை முக்கியமான சந்திப்பொன்று நடந்துள்ளது. பக்கம் 11

## கஜேந்திரகுமாரின் அணி தம்முடன் இணையுமாம்!

### இன்னும் நம்புகின்றார் விக்கி

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஓக. 24

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் கொள்கை ரீதியாக எங்களோடு சேர்ந்தவர்கள். ஆனால் தனிப்பட்ட காரணங்களுக்காகஇப்போது அவர்கள் விடுபட்டு நிற்கின்றார்கள்.எதிர்காலத்தில் அவர்கள்எம்முடன்சேருவார்கள் பக்கம் 11

## எழுக தமிழ் நிகழ்வில் சகலரும் கட்சி பேதமின்றி அணி திரள்க!

### சுரேஷ் பிறேமச்சந்திரன் கோரிக்கை

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஓக. 25

யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கும் எழுக தமிழ் பேரணியானது கட்சிகளுக்கு அப்பாற்பட்டதாக நடைபெறவுள்ளது. இதில் அனைவரும் கலந்துகொண்டு தமிழ்மக்களின்உணர்வுகளைவெளிப்படுத்தவேண்டும். பக்கம் 11

## ராஜபக்ஷாக்களை மண் கவ்வச் செய்ய சஜித்தைக் களமிறக்குகின்றார் ரணில்!

### மாத்தறை மக்கள் பேரணியில் மங்கள தெரிவிப்பு



கொழும்பு, ஓக. 24

ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் பிரதித் தலைவரான அமைச்சர் சஜித் பிரேமதாஸ நிச்சயம் பக்கம் 11

## கோட்டாபய பழைய கஞ்சி! அநுரகுமார பழைய சாதம்!!

### ஐக்கிய தேசியக் கட்சியின் வெற்றி வேட்பாளரை உரிய நேரத்தில் அறிவிப்போம் என்கிறார் மனோ



கொழும்பு, ஓக. 24

எங்கள் வேட்பாளரை இன்று முழு நாடும் யார் அவர், யார் அவர், யார் அவர் எனத் தேடுகின்றது. இதுவே எங்கள் வெற்றிக்கரமான இராஜதந்திரம். இன்று கோட்டா பழைய கஞ்சி. அநுர பழைய பக்கம் 02

## மாகாண சபைத் தேர்தல் குறித்து உயர்நீதிமன்ற விசாரணை நிறைவு

### வியாக்கியானம் விரைவில் ஜனாதிபதிக்கு

கொழும்பு, ஓக. 24

மாகாண சபைகளுக்கான தேர்தல்களை நடத்துவது குறித்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முன்வைத்த பக்கம் 11

## ஜனாதிபதித் தேர்தலில் நான் நிச்சயம் போட்டியிடுவேன்!

### மாத்தறையில் சஜித் முழக்கம்





கொழும்பு, ஓக. 24

யாரும் சந்தேகம் கொள்ளவேண்டாம். அடுத்த ஜனாதிபதி தேர்தலில் நான் நிச்சயம் பக்கம் 02

## பொது அமைதியை பேண முப்படைக்கும் அதிகாரம்

### அவசரகால நிலையின் ஒரு பிரிவை நடைமுறைப்படுத்தினார் ஜனாதிபதி

கொழும்பு, ஓக. 25

நாட்டின் பொது அமைதியைப் பேணிப் பொது மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் முப்படையினருக்கு அதிகாரமளிக்கும் பிரகடனத்தை ஜனாதிபதி மைத்திரி பக்கம் 11

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) களுடன் பகிர்ந்துகொள்ளலாம் என நினைக்கிறேன்.

புதன் இரவு ஓர் உத்தியோகப்பற்றற்ற இரவு விருந்துக்கு கூட்டமைப்பினரை நிதி அமைச்சர் மங்கள சமரவீர அழைத்திருந்தார். சம்பந்தன் – சுமந்திரனுக்கு தனியாகவும், மாவைக்குத் தனியாகவும் அழைப்புக் கொடுக்கப்பட்டதாகத் தகவல். அந்தவிருந்தில்சஜித்பிரேமதாஸாவும் வேறு சிலரும் பங்குபற்றுவர் எனக் கூட்டமைப்பினருக்கு முற்கூட்டியே கூறப்பட்டிருந்தது.

அமைச்சர் மங்களவின் கொழும்பு – 7 இல்லத்தில் 9 மணிக்கு சந்திப்பு என்று கூறப்பட்டாலும் ஒவ்வொருவராக வந்து சேர 11 மணியாகிவிட்டது நள்ளிரவுதாண்டி அதிகாலை ஒரு மணிவரை சந்திப்புத் தொடர்ந்தது. பாவம் சம்பந்தன் ஐயா. வயது மூப்புக் காரணமாக வழக்கமாக இரவு 10 மணிக்கு முன்னர் படுக்கைக்குப் போகின்றவர். அன்று அதிகாலை வரை தூங்காமல் இருக்கவேண்டியதாயிற்று.

மங்கள் தரப்பில் கபிர் காசிம், மலிக் சமரவிக்கிரம இரான் விக்கிரமரட்ண போன்றோரும் கலந்துகொண்டனர். சஜித் பிரேமதாஸா வந்துசேர கொஞ்சம் தாமதமாயிற்று. அதற்கு முன்னர் சஜித் பிரேமதாஸாவை ஏன் ஜனாதிபதிவேட்பாளராக நியமிக்கவேண்டும் என்பதற்கான காரணங்களை மங்களதரப்பு கூட்டமைப்பினரிடம் எடுத்துரைத்தது.

நாடு முழுவதும் தாங்கள் ஆய்வு செய்து துல்லியமான புள்ளிவிவரங்களைத்திரட்டியுள்ளனர் என்றும் அதனடிப்படையிலேயே இந்த முடிவுக்கு – தீர்மானத்துக்கு – தாங்கள் வந்திருக்கின்றார்கள் என்று அவர்கள் கூறினார்கள்.

ஆய்வடிப்படையில்கோட்டாபயவின் செல்வாக்கு விஞ்சி நிற்கின்றது. அதனுடன் போட்டி போடக்கூடிய செல்வாக்கு ரணிலுக்கு இல்லை. சஜித் பிரேமதாஸாவை நிறுத்தினால்தான் ஓரளவு போட்டி போட முடியும். அதுதான் ஆய்வுப் புள்ளி விவரங்களின் அடிப்படையில் வந்த முடிவு என்று அவர்கள் விளக்கினர்.

தோற்கின்ற வேட்பாளரை நாம் எப்படி ஆதரிக்க முடியும்? ஆகையினால்தான் சஜித்தை ஆதரிக்கிறோம் – என்று மங்கள தரப்புக் கூறியபோது சுமந்திரன் குறுக்கிட்டார். ஒரு கேள்வியை எழுப்பினார்.

உங்கள் வாதப்படி தோற்கின்ற வேட்பாளரை ஆதரிக்க முடியாது என்றால், சஜித்தை விடவும் செல்வாக்கில் இருப்பவராக உங்கள் புள்ளி விவரம் காட்டும் கோட்டாபயவை நீங்கள் ஆதரிக்கவேண்டியதுதானே...? பிறகேன் சஜித்தை ஆதரிக்கின்றீர்கள்...? –என்று ஒருபோடுபோட்டாராம் சுமந்திரன்.

திகைத்துப்போயினர் மங்கள தரப்பினர். ஒருவாறு சமாளித்தனர்.

இல்லை இல்லை... நாங்கள் இனவாதியை ஆதரிக்க முடியாது அல்லவா...? அதனால்தான் மாற்றாக சஜித்தை நிறுத்த முயல்கிறோம் – என்று பதில் வந்தது. சுமந்திரன் விடவில்லை.

கோட்டாபய இனவாதி என்றால் சஜித்திடம் அது இல்லையா...? – என்று சுமந்திரன் கேட்டதும் பதறிப் போயினர் மங்கள தரப்பினர்.

ஏன்...? அப்படி சஜித் இனவதி என்ற மனப்பதிவு – நிலைப்பாடு – ஏதும் உங்களுக்கு உள்ளதா? – என்று துளைத்தெடுத்தனர் சஜித் ஆதரவு எம்.பிக்கள்.

இல்லை... இல்லை... அப்படி ஏதும் கருத்து எம்மிடம் இதுவரை இல்லை... ஆனால் இவ்விடயத்தில் அவர் இன்னும் பரிசோதிக்கப்படாதவர். அவ்வளவுதான் – என்று கூறி சமாளித்தார் சுமந்திரன்.

அன்று அதிகாலை ஒரு மணி வரை கூட்டமைப்பின் மூத்தவர்களோடும் சஜித் பிரேதாஸா உரையாடியபோது தமிழரின் தேசிய இனப்பிரச்சினைக்கு அவரிடம் திட்டம் என்னவென்பதை அறிவதற்க தமிழர் தரப்பு விடாது முயன்றது எனினும் நான் பதவிக்கு வந்தால் ஆறுமாதத்தில் தீர்வு தருவேன் என்பதைத் திரும்பத்திரும்ப கூறியமையைத் தவிர அதற்கு அப்பால் எதுவும் விவரம் தெரிவிக்காமல் தப்பிக்கொண்டாராம் சஜித்.

சுமந்திரனின் அடுத்த வினா நேற்று உயர் நீதிமன்றத்தில் எழுப்பப்பட்டது.

மாகாண சபைத் தேர்தல்கள் நடத்தப்படாமல் இழுத்தடிக்கப்படுவது தொடர்பில் ஜனாதிபதி வழங்கிய குறிப்புக் குறித்து உயர்நீதிமன்றம் நேற்றுப் பரிசீலனை செய்தது. அந்தத் தேர்தலை மேலும் தாமதிக்காமல் நடத்துவதற்கானஉத்தரவுஎதனையும் உயர்நீதிமன்றம் வழங்க முடியுமா, அதற்கு வாய்ப்புகள் உண்டா என்ற சாரப்பட்ட குறிப்பையே ஜனாதிபதி உயர்நீதிமன்றத்துக்கு அனுப்பியிருந்தார். அதுவே நேற்று விசாரிக்கப்பட்டது.

அது குறித்து இப்பத்தியில் நேற்றும் விளக்கமாக எழுதியிருந்தேன். மாகாண சபைத் தேர்தல்களை நடத்துவதானால் நடாளுமன்றம் ஒரு சட்டத்தை யாக்க வேண்டும். அந்தச் சட்டம் வராமல் தேர்தலை நடத்துவதற்கு சட்ட ரீதியாக இடமில்லை. அதை யாக்காமல் நாடாளுமன்றம் இழுத்தடிப்பது தவறே. ஆனாலும் நாடாளுமன்றத்தில் அப்படி ஒரு சட்டத்தைக் காலதாமதம் செய்யாமல் நிறைவேற்றுங்கள் என்று நீதிமன்றம் உத்தரவிடமுடியாது.

எப்படி நீதிமன்றத்தின் நீதி பரிபாலன வேலையில் நாடாளுமன்றமோ பிற தரப்புகளோ தலையிட முடியாதோ, அது போலவே நாடாளுமன்றத்தின் சட்டமாக்கல் பணியில் நீதிமன்றம் உட்பட பிற தரப்புகள் யாரும் தலையிட முடியாது – என்று நேற்று இப்பத்தியில் குறிப்பிட்டிருந்தேன்.

அந்த அடிப்படையில்தான் சுமந்திரன் நேற்று உயர்நீதிமன்றத்தில் ஒரு நல்ல கேள்வியை உழுப்பினார்.

நேற்றைய உயர்நீதிமன்ற விசாரணைகளின்போது மாற்றுக் கொள்கைகளுக்கான மத்திய நிலையத்தின் சார்பில் ஆஜராகிவாதிட்ட சட்டத்தணி விரான் கொரய மேற்படி மாகாணசபைத் தேர்தல் சட்டத்தை இரண்டுவருடங்களுக்க மேல் யாக்காமல் நாடாளுமன்றம் இழுத்தடிப்பதால் மக்களின் வாக்களிக்கும் ஜனநாயக உரிமை மறுக்கப்பட்டு இழுத்தடிக்கப்படுகின்றது என்றார்.

ஜனநாயக உரிமையை உறுதிப்படுத்தும் நோக்கில் – மேம்படுத்தும் இலக்கில் – இந்த வீண் தாமதத்தைக் கவனத்தில் கொண்டு மேற்படி நாடாளுமன்றத்தின் சட்டமாக்கல் உரிமையில் உயர் நீதிமன்றம் தலையிடலாம்; தலையிடவேண்டும். மக்களின் ஜனநாயக உரிமை என்ற அடிப்படை உரிமையின் மகத்துவத்தின் பேரில் வீண் தாமதத்தைத் தவிர்ப்பதற்காக அதில் தலையிட்டு உயர் நீதிமன்றம் உத்தரவிடலாம். அது தவறல்ல – என்றார் விரான் சொரயா.

அவரது வாதம் ஐந்து நீதியரசர்கள் கொண்ட அந்த உயர் நீதிமன்றத்தில் ஒரு சட்டத் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கும் என்று பலரும் கருதிய நிலையில், அந்த வாதத்துக்கு ஒரு கேள்வி மூலம் தகுந்த பதிலடி கொடுத்தார் ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன்.

தேர்தல்களை நடத்துவதற்கு வேண்டிய சட்டத்தை யாக்காமல் இழுத்தடிப்பது நாடாளுமன்றத்தின் தவறு. மக்கள் பிரதிநிதிகளாக நாம் அதனைச் சுட்டிக்காட்டி வருகிறோம். அந்தத் தவறை இழைப்பவர்களுக்கு எதிராக மக்கள் மன்றத்தில் மக்கள்தான் தமது வாக்குகள் மூலம் தீர்ப்பளிக்க முடியும். அந்தத் தாமதத்துக்காக சட்டமாக்கல் வேலையில் உயர் நீதிமன்றம் – நீதித்துறை – தலையிட முடியாது அதற்கான நியாயாதிக்கம் உயர் நீதிமன்றுக்கு இல்லை.

ஏன் நீதிமன்றங்களில் கூட சில வழக்குகள் முப்பது, நாற்பது ஆண்டுகள் தீர்ப்புக் கூறப்படாமல் இழுபடுகின்றன. ஆனால் எது, எப்படி என்றாலும் – என்ன காலதாமதமானாலும் – அவற்றுக்கு நீதிமன்றங்கள்தான் முடிவு கூறவேண்டும். வேறு யாரும் கூறமுடியாது. ஏன் என்றால் அதற்கான நியாயாதிக்கம் நீதிமன்றங்களுக்கு மட்டுமே உண்டு.

நாடாளுமன்றம் சட்டத்தை ஆக்குவதில் தாமதிக்கின்றது என்று கருதி அதில் உயர் நீதிமன்றம் தலையிட்டு சட்டத்தை ஆக்கமுடியும் என்றால் –

சட்டத்தை ஆக்கும் பணியில் உயர் நீதிமன்றம் ஈடுபடமுடியும் என்றால் –

நீதிமன்றங்களில் வழக்குகள் தாமதிக்கப்படுகின்ற விடயம் நாடாளுமன்றுக்குச் சுட்டிக்காட்டப்படும்போது, நாடாளுமன்றம் அந்த வழக்குகளில் தலையிட்டு அந்த வழக்குகளின தீர்ப்புத் தாமதமாவதால் அதன் தீர்ப்பு இப்படித்தான் அமையவேண்டும் என்று தீர்ப்பு வழங்கலாம் அல்லவா? – எனக் கேள்வி எழுப்பினார் சுமந்திரன்.

அவரது அந்தக் கேள்வியைக் கேட்டு அசந்து போயினராம் நீதியரசர்கள்.

சட்டம் யாக்கும் வேலை நாடாளுமன்றத்துக்கு உரியது. அதில் நீதிமன்றம் தலையிடமுடியாது. வழக்குகளில் தீர்ப்பளிக்கும் பொறுப்பு – நியாயாதிக்கம் – நீதிமன்றங்களுக்கு உரியது. அதில் நாடாளுமன்றம் தலையிட முடியாது.

இதுதான் நிலைமை.

நேற்றைய உயர்நீதிமன்ற விசாரணைகுறித்துநேற்றுமாலை தம்மைக் சந்தித்த சுமந்திரனிடம் ஜனாதிபதிமைத்திரிபாலசிறிசேன கேட்டறிந்து கொண்டார்.

அப்போது ஒரு சுவையான விடயம் வெளியானது. அதனை நாளை இப்பத்தியில் பார்ப்போமா...?

**- மின்னல் -**

## ஜனாதிபதித்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) போட்டியிடுவேன். மாளிகையில் வாழ்வதற்கல்ல, நாட்டிலுள்ள அனைத்துக் குடும்பங்களையும் ராஜாவாக்குவதற்காகவே.

– இவ்வாறு தெரிவித்துள்ளார் ஐ.தே.கவின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாஸ.

மாத்தறை சனத் ஜயசூரிய மைதானத்தில் நேற்று இடம் பெற்ற பிரமாண்ட மக்கள் பேரணியில் உரையாற்றும்போதே இதனை தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் –

எவரும் எவ்வகையிலும் சந்தேகம் கொள்ளவேண்டாம். எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாஸ களமிறங்குவது உறுதியெனக் கூறுகிறேன்.

நாட்டை முன்னேற்றும், நாட்டின் தேசிய பாதுகாப்பை உறுதி செய்யும் தலைவர் ஒருவரையே மக்கள் எதிர்பார்க்கின்றனர். அன்பான மக்களே, எமது நாட்டுக்கு அந்தத் தலைமைத்துவத்தை நான் பெற்றுக் கொடுப்பேன் என்பதை இவ்வேளையில் கூறுகிறேன்.

தேசிய பாதுக்பை உறுதிப்படுத்தும் திட்டமொன்றை, பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்தும் திட்டமொன்றை, நாட்டை ஒன்றுபடுத்தும் திட்டமொன்றை முன்வைக்கவேநாம் எதிர்பார்க்கிறோம். எதிர்வரும் நவம்பர் மாதம் நாட்டில் மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்தும் போது, சிறலங்கன் பெஸ்ற் என்ற திட்டத்தை முன்னெடுப்போம் என்பதை கூறுகின்றேன்.

நவம்பர், டிசெம்பர் மாதங்களில் ஏற்படுத்தும் இந்த மாற்றத்தின் நோக்கம், மக்கள் கழுத்தேறிச் சென்று மாளிகைகளில், சொகுசு வாழ்க்கை வாழ்வதல்ல. உங்களுக்கு சஜித் பிரேமதாஸ ஒருவாக்களிக்கிறார். உங்களுக்கு சஜித் பிரேமதாஸவை மாளிகையில் காண முடியாது. எனினும், இந்த நாட்டிலுள்ள 42,000 சிறிய கிராமங்களில் என்னை உங்களால் காண முடியும். 14,000 கிராமசேவகர் பிரிவுகளிலும் என்னை கண்டுகொள்ள முடியும்.

இந்த நாட்டிலுள்ள 61 இலட்சம் குடும்பங்களையும், 220 இலட்சம் மக்களையும் அரசர்களாக்கும்யுகத்திற்குநான்கொண்டு செல்வேன் – என்றார். (ஐ)

## கோட்டாபய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) சாதம். முழுநாட்டின்அவதானத்தையும்எம்பக்கம்நாம் இன்றுதிருப்பி உள்ளோம். உரிய வேளையில் எமது வெற்றி வேட்பாளரை நாம் அறிவிப்போம். ஆனால், அந்த அறிவிக்கும் வேலையை நாமே தீர்மானிப்போம்.

– இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் அமைச்சருமான மனோ கணேசன் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் வேட்பாளர் கோட்டாபயவின் குடியுரிமை விவகாரம், ஒரு சட்ட விவகாரம். அதை அமெரிக்க அரசும், இலங்கை தேர்தல் ஆணையகமும், தேர்தல் கண்காணிப்பு குழுக்களும் பார்த்துக் கொள்ளட்டும். அந்தக் குடியுரிமைப் பிரச்சினையைக் கட்டிப் பிடித்துக்கொண்டும், தூக்கிப்பிடித்துக்கொண்டும் நாம் அரசியல் செய்ய முடியாது. அப்படிச் செய்வதில் எனக்கு உடன்பாடு இல்லை என்றும் தனியார் தொலைக்காட்சி ஒன்றில் இடம்பெற்ற சிங்கள மொழியிலான அரசியல் கலந்துரையாடல் நிகழ்வில் அமைச்சர் மனோ குறிப்பிட்டார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உதய கம்மன்பில, இந்திக அனுருத்த மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹெக்டர் அப்புஹாமி ஆகியோர் கலந்துக்கொண்ட இந்த சிங்கள மொழியிலான விவாதத்தில் அமைச்சர் மனோ மேலும் கூறியதாவது:–

உருவாகிவரும் எங்களது ஜனநாயக தேசிய முன்னணிக்கும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கும் இடையிலான வித்தியாசம் என்ன தெரியுமா? அது புரிந்துகொள்ள மிகவும் இலகுவானது. ஆனால், அதை உங்களில் பலர் புரிந்துக்கொள்ளத் தவறுகிறீர்கள்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைமையில் இருப்போர் ஓர் குடும்ப அங்கத்தவர்கள். எமதுஜனநாயகதேசியமுன்னணி தலைமையில் இருப்போர் பல கட்சிகளின் அங்கத்தவர்கள். ஆகவே, உங்கள் தலைமை குடும்பமான ராஜபக்ஷ குடும்பத்தில்தான் ஒருவரை நீங்கள் வேட்பாளராகப் போட வேண்டும். போட்டும் உள்ளீர்கள். இனி வருங்காலத்தில் ஒருவேளை நீங்கள் வென்றால், பிரதமர் மற்றும் பிரபல அமைச்சர்கள் எல்லோருமே ராஜபக்ஷ குடும்ப அங்கத்தவர்கள்தான். இந்தக் குடும்பத்துக்கு வெளியே தகுதியானவரைத் தேடிப் பார்க்க உங்களால் முடியாது. அதுதான் உங்கள் ஜனநாயகம்.

ஆனால், நாங்கள் எங்களது ஜனநாயக தேசிய முன்னணியிலே, கட்சி அங்கத்தவர்களில் இருந்தே தகுதியானவரை நாம் தேடி நியமிக்கின்றோம். இதுதான் எங்கள் ஜனநாயகம். குடும்பமா? கட்சியா? எங்கே ஜனநாயகம் உள்ளது? என்பதைத் தேடிப் பாருங்கள். அதற்காக ஒரே குடும்பத்தில் இருந்து பலர் அதே கட்சிக்கு உள்ளே வருவதை நான் மறுக்கவில்லை. தென்னாசியாவில் இது வழமை. உலகிலும் பலநாடுகளில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தோர் ஒரே கட்சியில் இருக்கின்றார்கள். இந்த விடயமோ அல்லது உங்கள் வேட்பாளர் கோட்டாபயவின் இரட்டைக் குடியுரிமை பிரச்சினையையோ எனக்கு முக்கியமில்லை.

ஒரே குடும்பம் என்பதால்தான் உங்களால் தாமதமில்லாமல் வேட்பாளரை அறிவிக்க முடிந்தது. இதே காரணத்தால்தான் நாம் இன்னமும் எமது வேட்பாளரை அறிவிக்கவில்லை. இது ஒரு ஜனநாயக தாமதம். இதைப் புரிந்துகொள்ளுங்கள்.

நான் பகிரங்கமாக உங்கள் வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷவுக்கும், ஜே.வி.பி. வேட்பாளர் நண்பர் அநுரகுமார திஸா நாயக்கவுக்கும் வாழ்த்துக்களை ஏற்கனவே கூறியுள்ளேன். எனக்கு உங்கள் எவருடனும் தனிப்பட்ட விரோதம் கிடையாதே. நான் அரசியல் முரண்பாடுகளை உடம்பில், தலையில் ஏற்றிக்கொள்வது இல்லை. ஆகவே, மனப்பூர்வாக வாழ்த்துகின்றேன். இது என் தனிப்பட்ட கலாசாரம். ஆனால், அரசியலில் நமது கட்சி இருக்கும் இடம் வேறு. அது என் அரசியல் கலாசாரம்.

எங்கள் வேட்பாளரை இன்று முழு நாடும் யார் அவர், யார் அவர், யார் அவர் எனத் தேடுகின்றது. இன்று கோட்டா பழைய கஞ்சி. அநுர பழைய சாதம். எமது வேட்பாளரை அறிந்து கொள்ள நாடு விரும்புகின்றது. முழு நாட்டின் அவதானத்தையும் எம் பக்கம் நாம் இன்று திருப்பி உள்ளோம். உரிய வேளையில் எமது வெற்றி வேட்பாளரை நாம் அறிவிப்போம். ஆனால், அந்த அறிவிக்கும் வேலையை நாமே தீர்மானிப்போம்.

இங்கே இம்முறை வேட்பாளரைப் பெயரிடும் சந்தர்ப்பத்தை நாம் விரும்பி, ஐக்கிய தேசியக் கட்சிக்கு வழங்கி உள்ளோம். 2010, 2015 வருடங்களில் வெளியில் இருந்து வேட்பாளர் வந்த காரணத்தால், இம்முறை ஐக்கிய தேசியக் கட்சியின் உள்ளே இருந்து வேட்பாளர் வருவது மிகவும் நியாயமானது. இதை நானே முதலில் கூறினேன். ஆகவே, ஐ.தே.க. பெயரிடும் வேட்பாளரை நாம், ஜனநாயக தேசிய முன்னணி தலைமை குழுவில் அங்கீகரிப்போம். இங்கு இப்போது ரணில், சஜித், கரு ஆகிய மூன்று பெயர்கள் பேசப்படுகின்றன. எவர் வந்தாலும் அவர் வெறும் வேட்பாளர் மட்டுமல்ல. அவர் எங்கள் டீம் லீடர். இங்கே டீம் என்ற தலைமைக்குழு முக்கியமானது. நாம் ரணில் ஆட்சிக்கு, சஜித் ஆட்சிக்கு, கரு ஆட்சிக்கு வித்திடவில்லை. எமக்குத் தேவை சட்டத்தின் ஆட்சியே – என்றார். (ஐ)

# சீனா கொடையாக கொடுத்த பராக்கிரமபாகுவை கடற்படையில் இணைத்த மைத்திரி!

கொழும்பு, ஓக. 24

இலங்கைக்குச் சீனாவினால் கொடையாக வழங்கப்பட்ட பி 626 என்ற ஆழ்கடல் ரோந்துக் கப்பல் நேற்று முன் தினம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால், ஆணையிட்டுக் கடற்படையில் இணைத்துக் கொள்ளப்பட்டது.

எஸ்.எல்.என்.எஸ். பராக்கிரம என்று பெயரிடப்பட்டுள்ள இந்தப் போர்க்கப்பலை ஆணையிட்டு இயக்கி வைக்கும் நிகழ்வு நேற்று முன் தினம் மாலை கொழும்புத் துறைமுகத்தின் கிழக்குக் கொள்கலன் முனையத்தில் இடம்பெற்றது,

இந்தப் போர்க்கப்பலின் கட்டளை அதிகாரியான கப்டன் நளீந்திர ஜெயசிங்க, ஜனாதிபதியிடம் இருந்து போர்க்கப்பலுக்கான ஆணையை பெற்றுக் கொண்டார்.



இந்த நிகழ்வில் பாதுகாப்புச் செயலர், கடற்படை, இராணுவ, விமானப்படை தளபதிகள், பாதுகாப்பு அதிகாரிகள் பிரதானி மற்றும் சீன தூதுவர் செங் ஷியுவான் உள்ளிட்டோரும் கலந்து கொண்டனர்.

1994 கட்டப்பட்ட இந்தப் போர்க்கப்பல், 112 மீற்றர் நீளமும், 12.4 மீற்றர் அகலமும் கொண்டது. 2300 தொன் எடை கொண்ட இந்தக் கப்பலில், 18 அதிகாரிகள் உள்ளிட்ட 110 மாலுமிகள் பணியாற்றுவதற்கான வசதிகள் உள்ளன.




இலங்கைக் கடற்படையில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ள இந்தப் போர்க் கப்பல், ஆழ்கடலில் தேடுதல், மீட்பு நடவடிக்கைகள் மற்றும் கடல் எல்லைகளைக் கண்காணிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படவுள்ளது.

திருகோணமலையில் உள்ள கிழக்குக் கடற்படைத் தலைமையகத்தின் கீழ் இந்தப் போர்க்கப்பல் இயங்கவுள்ளது.

சீனாவின் ஷங்காய் துறைமுகத்தில் கடந்த ஜூன் மாதம் இலங்கைக் கடற்படையிடம் ஒப்படைக்கப்பட்ட இந்தப் போர்க் கப்பல், ஜூலை மாதம் கொழும்பு துறைமுகத்துக்குக் கொண்டு வரப்பட்டது. (ஐ)




# காலாவதியாகியது அவசரகாலச் சட்டம்

## இனி நீடிக்கப்படாது என எதிர்பார்ப்பு

கொழும்பு, ஓக. 24

நாட்டில் கடந்த ஏப்ரல் 22ஆம் திகதி தொடக்கம் நடைமுறையில் இருந்து வந்த அவசரகாலச் சட்டம் நேற்றுமுன் தினம் காலாவதியாகியுள்ளது.

ஏப்ரல் 22 குண்டுத் தாக்குதல்களை அடுத்து, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால், அவசரகாலச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

அதன் பின்னர், நாடாளுமன்ற ஒப்புதலுடன், அவசரகாலச் சட்டத்தை, ஜனாதிபதி மாதம் தோறும் நீடிப்புச் செய்து வந்தார். இந்த நிலையில், கடந்த ஜூலை 22 ஆம் திகதி நீடிப்புச் செய்து வெளியிடப்பட்ட அவசரகாலச்சட்ட வர்த்தமானி அறிவிப்பு நேற்று முன்தினம் காலாவதியானது.

அவசரகாலச்சட்டத்தை நீடிப்புச் செய்வது தொடர்பான வர்த்தமானி அறிவிப்பு எதையும் ஜனாதிபதி இதுவரை வெளியிடவில்லை. இதனால் அவசரகாலச் சட்டம் இனி நீடிக்கப்படாது என எதிர்பார்க்கப்படுகிறது.

அவசரகாலச்சட்டத்தை நீடிப்பதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிர்ப்பு வெளியிட்டு வந்தபோதும், இரண்டு பிரதான கட்சிகளும் அதற்கு ஆதரவு அளித்து வந்தன.

இதற்கிடையே அவசரகாலச் சட்டம் நீடிக்கப்படமாட்டாது என நம்புவதாக சுற்றுலாத் துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க கூறியுள்ளார். (ஐ)




# நல்லூர்க் கந்தன் ஆலயம் நோக்கி வவுனியாவிலிருந்து நடைபவனி



வவுனியா, ஓக. 24

வரலாற்று பிரசித்தி பெற்ற நல்லூர் கந்தன் ஆலயத்தின் தேர்த் திருவிழாவை முன்னிட்டு வவுனியாவிலிருந்து வேல் தாங்கிய பாதயாத்திரை நேற்றுக் காலை வவுனியா வேப்பங்குளம் ஸ்ரீ பத்திரகாளி அம்மன் தேவஸ்தானத்தில் விசேட பூஜை வழிபாட்டுடன் ஆரம்பமானது.

ஆலய நிர்வாகியும் அறநெறிச் செல்வியுமான கு.ஜெயராணி (சாமி அம்மா) தலைமையில் ஆரம்பமான பாதயாத்திரையில் பெருந்திரளான நல்லூர்க் கந்தன் அடியார்கள் கலந்து கொண்டனர்.

வவுனியா வேப்பங்குளம் ஸ்ரீபத்திர காளி அம்மன் ஆலயத்திலிருந்து புறப்பட்ட வேல் தாங்கிய பாதயாத்திரைக் குழுவினர் மன்னார் வீதியூடாக வவுனியா நகரை அடைந்து பின்னர் ஏ - 9 வீதியூடாக நல்லூர் கந்தன் ஆலயத்தை நோக்கிப் புறப்பட்டனர்.

9ஆவது வருடமாக இடம்பெறும் இந்த வேல்தாங்கிய பாத யாத்திரை எதிர் வரும் 29 ஆம் திகதி நல்லைக்கந்தன் திருத்தலத்தை சென்றடையவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ - 100)



நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – https://kalaikathir.online

## பொதுவேட்பாளர் சாத்தியமா?

தேவைகளுக்கு ஏற்ப செல்நெறியை மாற்றுவதுதான் அரசியல் பாங்கு.

நாட்டின் எதிர்காலத் தலைவிதியைத் தீர்மானிக்கப் போகும் ஜனாதிபதித் தேர்தல் நெருங்கி வருகின்றது.

அதனை ஒட்டிக் கட்டவிழ்கின்ற பல்வேறு விடயங்களுக்கும் ஏற்ப அரசியல் செல்நெறிப் பாதைகளை மாற்றி ஒழுங்குபடுத்திக் கொள்ள வேண்டிய கட்டாயம் அரசியல் கட்சிகளுக்கு – குறிப்பாகப் பிரதான அரசியல் கட்சிகளுக்கு – உண்டு.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறைமை நடைமுறைப்படுத்தப்பட்ட காலம் முதல் பதினேழு ஆண்டுகள் அந்தப் பதவியை ஐ.தே.கட்சியே வைத்திருந்தது. ஜே.ஆர்.ஜெயவர்த்தன, பிரேமதாஸா, டி.பி.விஜேதுங்க ஆகியோர் இக்காலத்தில் பதவியில் இருந்தனர்.

1994 நவம்பரில் அது ஐ.தே.கட்சியை விட்டுக் கை நழுவியது. அதற்குப் பின்னர் இன்று வரை – சுமார் இருபத்தியைந்து ஆண்டுகள் – அது ஐ.தே.கட்சிக்கு எட்டாக் கனியாகவே இருந்து வருகின்றது. சுருக்கமாகச் சொல்வதானால் ரணில் விக்கிரமசிங்க ஐ.தே.கட்சி யின் தலைமைப் பதவியை ஏற்ற நாள்முதல் அக்கட்சிக்கு ஜனாதிபதிப் பதவி கிட்டாத விடயமாகவே இருந்து வருகின்றது.

1999 இல் சந்திரிகா குமாரதுங்கவிடமும், 2005 இல் மஹிந்த ராஜபக்ஷவிடமும் ஜனாதிபதித் தேர்தலில் தோற்றுப் போனார் ஐ.தே.கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க. அதற்குப் பின்னர் கடந்த பதினான்கு ஆண்டுகளில் இடையில் இடம்பெற்ற இரண்டு ஜனாதிபதித் தேர்தல்களிலும் ஐ.தே.கட்சி போட்டியிடவில்லை.

2010 இல் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் சரத் பொன்சேகாவையும், 2015 இல் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிபால சிறிசேனவையும் பொது வேட்பாளராகக் களமிறக்கியது ஐ.தே.கட்சி.

அப்படி இறக்கியமை மட்டுமல்லாமல் கையையும் சுட்டுக்கொண்டது அக் கட்சி.

2010 ஜனாதிபதித் தேர்தலில் ஐ.தே.க. முன்நின்று நிறுத்திய சரத் பொன்சேகா எதிர்பாராத படுதோல்வியைச் சந்தித்தார்.

2015 தேர்தலில் ஐ.தே.கட்சி நிறுத்திய மைத்திரிபால சிறிசேன வென்றாராயினும் அவர் ஐ.தே.கட்சிக்கு நன்றியாக நடந்து கொள்ளவில்லை. விரைவிலேயே அணி மாறி, அரசியல் எதிரித்தனத்தைக் காட்டினார்.

இந்த விடயங்களினால் பொதுவேட்பாளரை நிறுத்திப் பெரும் கசப்புணர்வைச் சம்பாதித்துக் கொண்ட ஐ.தே. கட்சி, அதனால் இனிமேல் பொது வேட்பாளர் என்ற பேச்சே வேண்டாம் என்ற முடிவுக்கு வந்து விட்டது.

இந்தப் பின்புலத்தில்தான் தென்னிலங்கை அரசியலில் புதிய போக்குகள் கட்டவிழ்ந்திருக்கின்றன.

அவற்றைக் கவனத்தில் எடுத்துக் காய் நகர்த்தல்களை மேற்கொள்ள வேண்டிய கட்டாயத்துக்கு அக்கட்சி வந்திருக்கின்றது.

ஒருபுறம், குறுகிய காலத்தில் விஸ்வரூபம் எடுத்துள்ள பொதுஜனப் பெரமுன தனது வேட்பாளராக கோட்டாபயவைப் பெரும் ஆரவாரம் மற்றும் வரவேற்புக்கு மத்தியில் அறிவித்திருக்கின்றது. கோட்டாபயவுக்குப் பின்னால் தென்னிலங்கை பௌத்த, சிங்களத் தீவிரவாதம் அணி திரளும் ஆபத்து நிலை துலாம்பரமாகத் தென்படுகின்றது.

கடந்த தடவை பொது வேட்பாளரை ஆதரித்து அவரை வெற்றி பெறச் செய்யக் காரணமாக அமைந்த ஜே.வி.பியும், மறுபுறத்தில் இம்முறை தனித்துக் களமிறங்குகின்றது. அதற்கும் ஆர்ப்பாட்டமான ஆரம்ப வரவேற்பு கிட்டியிருக்கின்றது.

இந்தச் சூழலில்தான் ஐ.தே.கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும், துணைத் தலைவர் சஜித் பிரேமதாஸாவும் ஜனாதிபதி வேட்பாளர் நியமனத்துக்காகத் தமக்குள் மோதிக் கொள்ளும் மோசமான நிலைமை வெளிப்பட்டு நிற்கின்றது.

ஐ.தே.கவும் அதன் ஆதரவுக் கட்சிகளும் ரணில், சஜித் என்று கன்னை கட்டிப் பிரிந்து தமக்குள் மோதிக் கொள்ளும் ஏதுநிலைகளும் கூடத் தாராளமாகத் தென்படுகின்றன.

வேட்பாளரை விடத் தங்கள் கட்சியும், தாங்கள் சார்ந்த அணியுமே முக்கியம் என்பதை ஐ.தே.கவினர் உணருவார்களேயானால் ரணில், சஜித் பிளவை முடிவுக்குக் கொண்டு வந்து, ஒரு பொது வேட்பாளரை மீளவும் நிறுத்துவதே கட்சிக்கும், தாங்கள் எதிர்பார்க்கும் ஜனாதிபதி பதவிக்கும் நாட்டின் எதிர்காலத்துக்கும் நல்லது என்பதை அவர்கள் புரிந்து கொள்வார்கள்.

அந்த வகையில் முன்னாள் உயர் நீதிமன்றப் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவின் பெயர் சமூக அமைப்புகளினால் பரிந்துரைக்கப்பட்டிருப்பதாகத் தெரிகின்றது.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதிப் பதவியை நம்பிக்கையுள்ள தமது தரப்பு பொறுப்பேற்க வேண்டும் என ஐ.தே.க. பிரமுகர்கள் கருதுவார்களேயானால், உட்கட்சிப் பூசலை விட்டு வெளியே வந்து, ஷிராணி பண்டார நாயக்க போன்ற பொது வேட்பாளரை ஆதரிக்க முன்வர வேண்டும்.

அது ஒரு நல்ல பரிந்துரை. என்ன செய்யப் போகின்றது ஐ.தே.க...?

பொறுத்திருந்து பார்ப்பதுதான் நமக்கு ஒரே வழி.

# மக்கள் வங்கியையும் அரசு விற்கப் போகும் அபாயம்

## டக்ளஸ் எம்.பி. தெரிவிப்பு



கொழும்பு, ஓக. 24

தேசிய பாதுகாப்பிற்கு பாதகம் வருகின்ற நிலையில், முப்படைகளைக் கொண்டு, தேசிய பாதுகாப்பை உறுதி செய்வதற்கு ஏற்பாடுகளை மேற்கொள்வது போன்று, ஒரு நாட்டில் பொருளாதாரக் கட்டமைப்பிற்கு பாதகம் வருகின்ற நிலையில், அதனைப் பேணிப் பாதுகாப்பதற்கு அரச நிதி நிறுவனங்களைக் கொண்டே அந்த ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

மக்கள் வங்கி திருத்தச் சட்டம் கொண்டு வரப்படுகின்ற நிலையில், மக்கள் வங்கியையும் இந்த அரசு விற்கப் போகிறது என்ற குரலே இன்று நாடளாவிய ரீதியில் ஓங்கி எழுந்து நிற்கின்றது.

ஆனால், அப்படியல்ல, மக்கள் வங்கியின் மூலதனத்தை விருத்தி செய்வதற்காகவே இந்தத் திருத்தச் சட்டம் கொண்டு வரப்படுவதாக அரச தரப்புக் கூறுகின்றது. இந்த அரச தரப்பு இப்படிக் கூறினாலும், எப்படிக் கூறினாலும் அதை நம்புகின்ற அளவிற்கு இந்த நாட்டு மக்கள் இல்லை. ஏனென்றால், ஒன்றைக் கூறி, இன்னொன்றைச் செய்வதே இந்த அரசின் செயற்பாடுகளாக இருந்து கொண்டிருப்பதாகவே எமது மக்கள் நம்புகின்றனர் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகார சபை கீழான கட்டளைகள் தொடர்பிலான விவாதத்தில் கலந்து கொண்டபின் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

1961ஆம் ஆண்டு அப்போதைய வாணிப, வர்த்தக, உணவு மற்றும் கப்பற்றுறை அமைச்சராக இருந்த அமரர் டீ. பீ. இலங்கரத்ன அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த 29ஆம் இலக்கச் சட்டத்தின் ஊடாக கூட்டுறவு சமஸ்ரி வங்கியானது மக்கள் வங்கியாக மாற்றப்பட்டு, 50 ரூபாவினைக் கொண்டதான 1 இலட்சத்து 20 ஆயிரம் பங்குகளைக் கொண்ட ஆரம்ப நிதியான 60 இலட்சம் ரூபாவினைப் பயன்படுத்தி வங்கி பலப்படுத்தப்பட்டது.

இந்த பங்குகளின் பாதியை அரசு பெற்றுக் கொண்டதுடன், ஏனைய பங்குகளை நாடளாவிய ரீதியில் செயற்பட்டிருந்த கூட்டுறவுச் சங்கங்கள் பெற்றிருந்தன.

இந்த வங்கியானது கூட்டுறவுச் சங்கங்களால் ஏற்பாடு செய்யப்பட்ட மக்களும், அரசும் இணைந்து மேற்கொள்கின்ற நிறுவனம் என்பதால் ஆரம்ப நிதி என்ற வகையில் தனிப்பட்டவர்களது நிதியினைப் பயன்படுத்துவதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டிருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

தற்போதைய நிலையில் 738 கிளைகளைக் கொண்டு, தனது சேவைகளை மிகவும் சிறந்த முறையில் மேற்கொண்டு, வெற்றிகரமாக இந்த மக்கள் வங்கி செயற்பட்டு வருகின்றதாகவே அறிய முடிகின்றது.

அத்துடன், அரசின் கூட்டிணைந்த நிதியத்திற்கு வருடந்தோறும் மக்கள் வங்கியானது 500 கோடி போன்ற பெரியதொரு தொகையினை வழங்கி வருவதாகவும், இதற்கு மேலதிகமாக வரி என்ற வகையிலும் பெரியதொரு தொகையை வழங்கி வருவதாகவும் தெரிய வருகின்றது.

கடந்த வருடத்தில் மாத்திரம், மக்கள் வங்கி, இலங்கை வங்கி உள்ளிட்ட அரச வங்கிகளின் மூலமாக 5000 கோடிக்கும் அதிகமான நிதி அரசுக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும், இதில் மக்கள் வங்கி மாத்திரம் 1900 கோடி ரூபாவினை வழங்கியுள்ளதாகவும் தகவல்கள் கூறுகின்றன.

இத்தகைய இலாபத்தினை இந்த வங்கி ஈட்டி வருகின்ற நிலையில், மக்கள் வங்கியிடமுள்ள சொத்துக்களை அதிகரிக்கின்ற வகையில் பங்கு நிதியினை ஒன்று திரட்டுவதற்கும், தொகுதிக் கடன்களை வழங்குகின்ற வரையறையை மேலும் அதிகரிப்பதற்குமாக இந்தத் திருத்தச் சட்டம் கொண்டு வரப்படுவதாகக் கூறப்படுகின்றது.

ஆரம்பத்தில் இந்த நாட்டில் இலாபம் தராத அரச நிறுவனங்களே விற்கப்பட்டு வந்தன. இப்போது, அரசுக்கு நிறையவே இலாபம் தருகின்ற நிறுவனங்களும் விற்கப்பட்டு வருகின்றனவா? என்ற கேள்வி அரச காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திலிருந்து எழுகின்றது.

இந்தத் திருத்தச் சட்டத்தின் மூலமாக இரண்டாம் தர மூலதனத்தைப் பெற்றுக் கொள்வதற்கென தொகைக் கடன்களை விநியோகிப்பதே எதிர்பார்ப்பு என்றும், எவ்வகையிலேனும், பங்கு விற்பனைகள் நடைபெற மாட் டா என்றும் மக்கள் வங்கியின் நிர்வாகத் தரப்புக் கூறுவதாகவும், அதேநேரம், பணியாளர்களுக்கும், கொடுக்கல் வாங்கலில் ஈடுபடுவோருக்கும் பங்குகள் விநியோகிக்கப்படும் என நிதி அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார் எனவும் இலங்கை, வங்கி ஊழியர்கள் சங்கத்தினர் தெரிவிக்கின்றனர்.

மக்கள் வங்கிச் சட்டத்தின் 13வது சரத்தினைப் பார்க்கின்றபோது, 'கூட்டுறவுச் சங்கமோ அன்றி உத்தியோகபூர்வ நிலைமையின் பிரகாரம் திறைசேரியின் செயலாளர் அல்லாத நபருக்கு வங்கியின் எந்தவொரு பங்குதாரர்களாலும் தமது பங்குகள் விற்பனை செய்யக் கூடாது' எனக் குறிப்பிடப்பட்டுள்ளமையையும் இங்கு சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது–என்றார். (ஐ)

# மித்தெனியவில் துப்பாக்கிச்சூடு

கொழும்பு, ஓக. 24

மித்தெனிய தோரகொலயாய பிரதேசத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் பலத்த காயத்திற்குள்ளாகி எம்பிலிப்பிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என மித்தெனிய பொலிஸார் தெரிவித்தனர்.

மித்தெனிய தோரகொலயாய பிரதேசத்தைச் சேர்ந்த 30 வயதுடைய நபர் ஒருவரே துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகியுள்ளார்.

காயத்திற்குள்ளான நபரின் வீட்டின் பின்னால் ஒளித்திருந்த நபர் ஒருவரே துப்பாக்கிச்சூட்டை மேற்கொண்டுள்ளார் என்றும், அந்தநபர் அடையாளம் காணப்பட்டுள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மித்தெனிய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

**நாளை**

25.08.2019
ஞாயிற்றுக்கிழமை

நட்சத்திரம்: மிருகசீரிடம்
பி.இ.12.93 வரை
திதி : தசமி சித்தம் பி.இ. 2.43 வரை

இராகுகாலம் : 4.35 – 6.05
சுப நேரம் : 9.05 – 10.35

# ரவீந்திர விஜேகுணரத்னவுக்கு டிசெம்பர் வரை சேவை நீடிப்பு



கொழும்பு, ஓக. 24

பாதுகாப்பு அதிகாரிகளின் பிரதானியான அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்னவுக்கு சேவை நீடிப்பு வழங்கி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உத்தரவிட்டுள்ளார்.

2017ஆம் ஆண்டு பாதுகாப்பு அதிகாரிகளின் பிரதானியாக நியமிக்கப்பட்ட அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்ன நேற்று முன்தினம் ஓய்வுபெறவிருந்தார்.

இந்த நிலையில், அவருக்கு 2019 டிசெம்பர் 31ஆம் திகதி வரை சேவை நீடிப்பு அளிக்கும் உத்தரவை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்றுமுன்தினம் வழங்கியுள்ளார்.

பாதுகாப்பு அதிகாரிகளின் பிரதானியாக 2017இல் பொறுப்பேற்க முன்னதாக, 2015ஆம் ஆண்டு ஜுலை 11ஆம் திகதியில் இருந்து கடற்படைத் தளபதியாக அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்ன பணியாற்றியிருந்தார். (ஐ)

# மைத்திரி - மஹிந்த இவ்வாரம் சந்திப்பு!

கொழும்பு, ஓக. 24

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும், எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவுக்கும் இடையிலான இரண்டாவது சுற்றுப் பேச்சுக்கள் இந்த வாரம் நடைபெறவுள்ளன.

கொழும்பில் எதிர்க்கட்சித் தலைவரின் செயலகத்தில் நேற்று முன்தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும இந்தத் தகவலை வெளியிட்டார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கும், கூட்டு எதிரணியில் அங்கம் வகிக்கும் கட்சிகளுக்கும் இடையில் கடந்த புதனன்று நடந்த சந்திப்பின்போது, பொதுவான கூட்டணி ஒன்றை உருவாக்க இணக்கம் காணப்பட்டுள்ளது.



பொதுஜன பெரமுனவுக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையில் கூட்டணி அமைத்துக் கொள்வது தொடர்பாக, இந்த வாரம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், மஹிந்த ராஜபக்ஷவும் சந்தித்து பேசவுள்ளனர் என்று அவர் மேலும் கூறினார். (ஐ)

## வெளி மீனவர் ஊடுருவலைத் தடுக்காவிடின்

# மைத்திரி வருகையை எதிர்த்துப் போராட்டம்!

## வடமராட்சி கடற்றொழில் சமாசம் எச்சரிக்கை

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஓக. 24

யாழ். குடாநாட்டுக் கடற்பகுதியில் வெளிமாவட்ட மீனவர்களால் மேற்கொள்ளப்படும் கடலட்டைத் தொழில், சுருக்குவலை தொழில், மற்றும் அடிமடி தொழில் ஆகியன நிறுத்தப்படாவிட்டால் ஜனாதிபதியின் வருகையை எதிர்த்து போராட்டம் நடத்துவோம் என வடமராட்சி கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாசத் தலைவர் நா.வர்ணகுலசிங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

நேற்றுமுன்தினம் யாழ்.ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

முல்லைத்தீவு தொடக்கம் தொண்டமனாறு வரை வெளிமாவட்டங்களைச் சேர்ந்த மீனவர்கள் சுருக்குவலை, அடிமடி தொழில் மற்றும் கடலட்டை தொழிலை செய்து வருகின்றனர்.

30 வருடங்கள் போரினால் அழிந்துபோன மக்களை கடந்த 10 வருடங்களில் இந்திய இழுவைப் படகுகள் அழித்தன. அதற்குப் பின்னர் இப்போது வெளி மாவட்ட மீனவர்கள் எமது கடல்வளத்தை அழித்துக் கொண்டிருக்கின்றனர். முல்லைத்தீவு சாலைப் பகுதியில் வர்த்தகர் ஒருவர் கடலட்டை பிடிப்பதற்கான ஒரு அனுமதியை வைத்துக்கொண்டு 100 ற்கும் மேற்பட்ட படகுகளை வைத்து தொழில் செய்து கொண்டிருக்கின்றார்.

அண்மையில் பருத்தித்துறை –முனை கடற்கரையிலிருந்த 2 கிலோ மீற்றருக்குள் வந்து சட்டவிரோதமாகத் தொழில்களைச் செய்து கொண்டிருந்த நிலையில் நாம் அவர்களைப் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்தோம். பின்னர் எம்மைச் சமாதானமாகப் போகுமாறு கூறிய பொலிஸார், முல்லைத்தீவிலிருந்து பண முதலைகள் வந்தவுடன் எங்கள் மீனவர்களை கைது செய்து நீதிமன்றில் நிறுத்தினர்.

பின்னர் நாம் எமது மீனவர்களைப் பிணையில் எடுத்த பின்னர் எங்கள் இரு படகுகளை எடுத்துச் சென்றுவிட்டனர்.

இன்றுவரை அதனை திரும்பிக் கொடுக்கவில்லை. அந்தப் படகுகளுக்குச் சொந்தக்காரர்களான மீனவர்களின் நிலை என்ன? இது குறித்து எங்கள் அரசியல்வாதிகள் எவரும் கவனத்தில் எடுப்பதில்லை. சகலருக்கும் இந்த விடயத்தை கூறினோம். ஒருவர்கூட கவனிக்கவில்லை. இந்நிலையில் நாம் தொழிலை இழந்து செத்துக்கொண்டிருக்கிறோம்.

இனிமேலும் பொறுமையாக இருக்க முடியாது. வாழ்வோ சாவோ இரண்டில் ஒன்றைப் பார்ப்பதற்கு நாங்கள் தீர்மானித்துள்ளோம். ஆகையினால் எமது பிரச்சினைகளைத் தீர்த்து வைக்குமாறு அனைவரிடமும் கோரிக்கை விடுக்கின்றோம்.

ஜனாதிபதி இந்த மாதம் 30ஆம் திகதி யாழ்ப்பாணம் வரவுள்ளார் எனக் கூறப்படுகின்றது.

அவர் சுருக்குவலை தொழில், கடலட்டை தொழில், மற்றும் அடிமடி தொழில் ஆகியவற்றை நிறுத்தாமல் வருவாராக இருந்தால் யாழ். மாவட்டத்தில் உள்ள சகல மீனவர்களையும் ஒன்றிணைத்து மக்கள் போராட்டம் ஒன்றை ஜனாதிபதிக்கு எதிராக நடத்தத் தீர்மானித்துள்ளோம் – என்றார். (ஐ - 07)

# புலனாய்வுப் பிரிவுகள் விரைவில் மறுசீரமைப்பு

## புதிய தளபதி தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 24

இராணுவப் புலனாய்வுப் பிரிவுகளை மீள்ஒழுங்கு செய்யவுள்ளதாக என புதிய இராணுவத் தளபதியாக பொறுப்பேற்றுள்ள லெப்.ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

கடந்த புதன்கிழமை இராணுவத் தலைமையகத்தில், கடமைகளைப் பொறுப்பேற்ற பின்னர், தனது இலக்குகள் தொடர்பாக லெப்.ஜெனரல் சவேந்திர சில்வா தகவல் வெளியிட்டுள்ளார்.



அவர் அங்கு தெரிவிக்கையில் –

இலங்கை இராணுவத்தின் நற்பெயரும் நம்பிக்கையும் பாதுகாக்கப்படவேண்டும். இது உலகின் எந்தவொரு படைகளுக்கும் இரண்டாவதாக இல்லை.

இராணுவப்புலனாய்வுப் பிரிவுகளை மறுசீரமைப்பதுடன், அனைத்துலகப் படைகளின் உத்திகளைக் கருத்தில் கொண்டு, அவற்றை உயர்ந்த நிலைக்கு உயர்த்துவது எனது எண்ணம்.

தொடர் பயிற்சிகள், அனுபவம்மிக்க திறமையான இராணுவத்தை உருவாக்கும். எந்தவொரு சவாலையும் எதிர்கொள்ள உதவும்.

நவீன மற்றும் உலகளாவிய தரத்துடன், தொழில்நுட்ப அறிவைக் கொண்டவர்களாக இராணுவத்தினரை உருவாக்குவதில் கவனம் செலுத்துவதே எனது நோக்கம். உலகின் எந்தவொரு இராணுவமும், நாட்டின் குடிமக்களின் தவிர்க்க முடியாத உரிமைகளைப் பாதுகாப்பதற்கும், ஜனநாயக வாழ்க்கை முறைக்கு உகந்த சூழ்நிலையை உருவாக்குவதற்கும் உறுதி பூண்டுள்ளன.

அதேவேளை உள் அல்லது வெளி அச்சுறுத்தல்களுக்கு எதிராக எந்தவொரு நடவடிக்கையையும் உறுதியுடன் கடைப்பிடிக்க எச்சரிக்கையாக இருக்கும்.

கடந்தகால போர் நடவடிக்கைகளின்போது, இராணுவம் அனைத்துலக மனிதாபிமான சட்டங்கள் மற்றும் உரிமைகளுக்கு அமையவே செயற்பட்டது. அந்த வழிகாட்டுதல்களைக் கடைப்பிடித்தது – என்றார். (ஐ)

# நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழிப்போம்

## உறுதியளிக்கின்றது ஜே.வி.பி.

கொழும்பு, ஓக. 24

நாட்டில் ஒரு சர்வாதிகார ஆட்சிக்குப் பதிலாக மக்களுக்கான பிரதிநிதியை உருவாக்குவதற்காகவே மக்கள் விடுதலை முன்னணி தலைமையிலான தேசிய மக்கள் சக்தி வேலை செய்யும் என அந்தக் கட்சி தெரிவித்துள்ளது.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழிப்போம் என உறுதியளித்த வேட்பாளர்களில் நம்பத்தகுந்தவர்கள் தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர் என்றும் அது கூறியுள்ளது.


மக்கள் விடுதலை முன்னணியின் தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி மேற்கண்டவாறு கூறினார்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை இல்லாதொழிக்கவே தாம் செயற்படுவோம் என்றும் அவர் உறுதியளித்தார்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழிப்போம் என உறுதியளித்தவர்கள் அதனைப் பின்பற்றவில்லை என சுட்டிக்காட்டிய அவர், இவ்வாறான வாக்குறுதிகளைப் பொதுமக்கள் ஒருபோதும் நம்பமாட்டார்கள் என்றும் கூறினார்.

இதேவேளை நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழிப்பது மட்டும் தமது நோக்கமில்லை எனத் தெரிவித்த அவர், நாடாளுமன்றத்திற்கு பொறுப்புக் கூறும் ஓர் அமைப்பையும் மக்களின் கருத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் தேர்தல் முறையையும் நிறுவுவதே தமது நோக்கம் எனவும் குறிப்பிட்டார். ஐ

# நல்லூர் ஆலய சூழலில் இன்று



யாழ்ப்பாணம், ஓக.24

இலங்கை இளங் கலைஞர் மன்றம் நல்லூர் முருகன் உற்சவத்தையொட்டி நல்லூர் துர்க்கா தேவி மணிமண்டபத்தில் நடத்தும் தெய்வீக இசையரங்கில்–

இன்று சனிக்கிழமை மாலை 6.45 மணி முதல் 7.15 வரை குழு இசை நல்லூர், சாரங்கம் இசைக் கல்லூரி மாணவர்கள் வயலின் – கே.வேலதீபன், மிருதங்கம் – ஞா.வசந், நெறியாள்கை – வாசஸ்பதி ரஜீந்திரன்.

7.15 முதல் 8.15 வரை இசைக்கச்சேரி பாட்டு – சாயிலக்சுமி யோகேஸ்வரன், வயலின் – சு.கோபிதாஸ், மிருதங்கம் – ம.சிதம்பரநாதன், முகர்சிங் – ந.சதீஸ்குமார்.

# இந்தியா, பாக். கேட்டுக்கொண்டால் மத்தியஸ்தம் வகிக்க அமெ. தயாராம்!

வொஷிங்டன், ஓக. 24

இந்தியா,பாகிஸ்தான் ஆகிய இருநாடுகளும் கேட்டுக்கொண்டால் காஷ்மீர் பிரச்சினையில் உதவி செய்ய தயார் என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது.

காஷ்மீருக்கு வழங்கப்பட்டு வந்த சிறப்பு அந்தஸ்து ரத்து செய்யப்பட்டதற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்து வரும் பாகிஸ்தான், காஷ்மீர் பிரச்சினையை சர்வதேச பிரச்சினையாக்க முயன்று தோல்வி அடைந்துள்ளது.

இந்த நிலையில், இந்த வார இறுதியில் நடைபெறும் ஜி – 7 மாநாட்டுக்கு இடையே, பிரதமர் மோடியும், அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்பும் சந்தித்து பேச உள்ளனர். இந்த பேச்சின் போது, காஷ்மீர் விவகாரம் குறித்து டிரம்ப் பிரஸ்தாபிப்பார் என்று வெள்ளை மாளிகை அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த நிலையில், வெள்ளை மாளிகையின் மூத்த அதிகாரி ஒருவர் கூறும்போது, இந்தியா – பாகிஸ்தான் ஆகிய இருநாடுகளும் கேட்டுக்கொண்டால் காஷ்மீர் பிரச்சினையில் டிரம்ப் மத்தியஸ்தம் செய்யத் தயாராக இருக்கிறார் எனத் தெரிவித்துள்ளார்.

எனினும், காஷ்மீர் விவகாரத்தில் இந்தியா இதுவரை எந்தக் கோரிக்கையும் முன் வைக்கவில்லை என்றும் அந்த அதிகாரி தெரிவித்தார். மேலும், பிராந்தியத்தில் நிலவும் பதற்றத்தை தணிக்க, மோடி முன் வைத்திருக்கும் திட்டம் பற்றியும் டிரம்ப் அறிய ஆர்வமாக இருக்கிறார் எனவும் வெள்ளை மாளிகை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.



# சந்தேகமான நபர்கள் குறித்து தகவல் தர பொதுமக்களிடம் பொலிஸார் கோரிக்கை



சென்னை,ஓக.24

சந்தேகம்படும்படி, யாரேனும் இருந்தால் அது குறித்து உடனடியாகத் தகவல் கொடுக்குமாறு காவல் உயர் அதிகாரிகள் பொதுமக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

பயங்கரவாதிகள் 6 பேர் தமிழகத்திற்குள் ஊடுருவியிருக்கின்றனர் என உளவுத்துறை வழங்கியுள்ள எச்சரிக்கையைத் தொடர்ந்து தமிழகம் முழுவதும் பாதுகாப்பை பலப்படுத்தும்படி அனைத்து மாவட்ட எஸ்.பி.க்கள் மற்றும் காவல் ஆணையாளர்களுக்கு டி.ஜி.பி. உத்தரவு பிறப்பித்துள்ளார். மேலும் கடலோர பகுதிகளில் சந்தேகத்திற்கிடமான படகுகளை கண்காணிக்கவும் உத்தரவு பிறப்பித்துள்ளார். அதன்படி நேற்று முன்தினம் இரவு முதலே அனைத்துப் பகுதிகளிலும் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது.

இதற்கிடையே, தமிழகத்தில் ஊடுருவியிருக்கும் 6 பயங்கரவாதிகளும் கோவையில் பதுங்கியிருக்கின்றனர் எனத் தகவல் வெளியானது. இதனால் கோவையில் உச்சபட்ச பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளது.

கோவை முழுவதும் பொலிஸார் கண்காணிப்பைத் தீவிரப்படுத்தி உள்ளனர். பொது இடங்கள் மற்றும் பதற்றமான இடங்களில் பொலிஸார் தொடர்ந்து ரோந்து சுற்றி வருகின்றனர்.

நெற்றியில் விபூதி, குங்குமம் அணிந்து மாறுவேடத்தில் ஊடுருவி உள்ள பயங்கரவாதிகளில் ஒருவன் பாகிஸ்தானைச் சேர்ந்தவனாக இருக்கலாம் என்றும், மற்ற 5 பேரும் இலங்கையைச் சேர்ந்தவர்கள் எனவும் உளவுத்துறை கூறி உள்ளது. பயங்கரவாதிகள் எனச்சந்தேகப்படும் நபர்களின் புகைப்படங்களை கோவை பொலிஸார் வெளியிட்டு உள்ளனர். 6 பயங்கரவாதிகளில் 3 பேரின் படங்கள் வெளியிடப்பட்டு உள்ளன.

இந்த நிலையில், சந்தேகம்படும்படி, யாரேனும் இருந்தால் உடனடியாக உதவி எண் 100ஐ அழைத்துத் தகவல் கொடுக்குமாறு பொதுமக்களுக்கு காவல் உயர் அதிகாரிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். பொதுமக்கள் பாதுகாப்பாக இருக்கவும், புகைப்படத்தில் உள்ள நபர்களை கண்டால் உடனடியாக காவல்துறைக்கு தகவல் அளிக்கவும் காவல்துறை வேண்டுகோள் விடுத்துள்ளது.

# இலங்கையிலிருந்து 6 பயங்கரவாதிகள் தமிழகத்திற்குள் ஊடுருவியுள்ளார்களாம்

## உளவுத் தகவலையடுத்து பாதுகாப்புத் தீவிரம்

**கோவை, ஓக 24**

**தமிழகத்திற்குள் பயங்கரவாதிகள் ஊடுருவியிருக்கின்றனர் என உளவுத்துறை எச்சரிக்கை விடுத்துள்ள நிலையில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.**

இலங்கையில் குண்டு வெடிப்பு சம்பவத்தில் ஈடுபட்ட பயங்கரவாதிகள் 6 பேர் இலங்கை வழியே தமிழகத்திற்குள் ஊடுருவியிருக்கின்றனர் எனவும், இலங்கையைப் போன்று தமிழகத்திலும் பயங்கரவாத தாக்குதலில் ஈடுபட அவர்கள் திட்டமிட்டிருக்கின்றனர் எனவும் தமிழக டி.ஜி.பி. திரிபாதிக்கு, மத்திய உளவுத்துறை தகவல் அளித்துள்ளது. இதையடுத்து, தமிழகம் முழுவதும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. பேருந்து நிலையங்கள், ரயில் நிலையங்கள், விமான நிலையங்கள் உள்ளிட்ட இடங்களில் தீவிர கண்காணிப்பில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.



கோவையில் உச்சக்கட்டப் பாதுகாப்புப் போடப்பட்டுள்ளது. இந்த சூழலில், கோவை காவல் ஆணையர் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார்.

அப்போது அவர் கூறியவை வருமாறு:-

கோவையில் வணிக வளாகங்கள், கோவில்களில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. கோவை முழுவதும் 2000 பொலிஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். கோவையில் மக்கள் கூடும் இடங்களில் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது, பொதுமக்கள் அச்சமடையத்தேவையில்லை. சோதனை சாவடிகளில் கண்காணிப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது என்றார்.

# இனிமேல் இந்தியாவுடன் பேசுவதற்கு எதுவும் இல்லை என்கின்றார் இம்ரான்

இஸ்லமாபாத்,ஓக.24

இந்தியாவுடன் இனி பேச்சு இல்லை என்று பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் தெரிவித்தார். இந்திய மத்திய அரசு காஷ்மீருக்கு சிறப்பு அந்தஸ்து வழங்கும் 370வது சட்ட பிரிவை ரத்து செய்தது. மேலும் மாநிலத்தை இரண்டு யூனியன் பிரதேசங்களாகப் பிரித்தது.

இந்த விடயத்தை ஒட்டி காஷ்மீர் விவகாரத்தை சர்வதேச பிரச்சினையாக்க ஐ.நாவில் சீனாவின் உதவியுடன் பாகிஸ்தான் மேற்கொண்ட முயற்சி தோல்வியைத் தழுவியது. இதனையடுத்து சர்வதேச நீதிமன்றத்தை நாட உள்ளதாக பாகிஸ்தான் அறிவித்தது. இந்த விவகாரத்தில் சர்வதேச நாடுகளின் ஆதரவைக் கோரும் பாகிஸ்தான் முயற்சியும் தோல்வியில் முடிந்தது.

இதையடுத்து, பயங்கரவாதத்தைக் கைவிட்டால் மட்டும் பாகிஸ்தானுடன் அமைதிப் பேச்சு நடத்த முடியும் என்று இந்தியா மீண்டும் திட்டவட்டமாகத் தெரிவித்தது.

இந்த நிலையில், இம்ரான் அளித்த பேட்டியில் கூறியிருப்பவை வருமாறு:-

பாகிஸ்தானில் இயங்கி வரும் பயங்கரவாத அமைப்புகளுக்கு எதிராக பாகிஸ்தான் உறுதியான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. ஆனால், பயங்கரவாதக் குழுக்களுக்கு எதிராக நம்பத்தகுந்த நடவடிக்கைகளை மேற்கொண்டால் மட்டுமே பாகிஸ்தானுடன் அமைதிப் பேச்சு நடத்தப்படும் என்று இந்தியா தொடர்ந்து கூறி வருகிறது.



இனிமேல் செய்வதற்கு ஏதுமில்லை. இருப்பினும், இந்தியா தொடர்ந்து குறை கூறி வருகிறது. இந்தியாவில் இருப்பவர்களை சமாதானப்படுத்தவே இந்தியா அவ்வாறு கூறுவதாக எண்ணத் தோன்றுகிறது. எனவே, இந்தியாவுடன் பேசுவதற்கு எந்த விஷயமும் இல்லை. - என்றார்.

காலைக்கதிர் Kalaikathir



### அமெரிக்க இராணுவ நடவடிக்கைகளால்

# கொரிய தீபகற்பத்தில் மீண்டும் பனிப்போர்

### உருவாகும் என எச்சரிக்கின்றது வடகொரியா



பியாங்யாங்,ஓக.24

அமெரிக்காவின் இராணுவ நடவடிக்கைகளால் கொரிய தீபகற்பத்தில் மீண்டும் பனிப்போர் உருவாகும் என வடகொரியா எச்சரித்துள்ளது.

வடகொரியாவின் எதிர்ப்பை மீறி அமெரிக்கா மற்றும் தென்கொரியாவின் இராணுவ படைகள் கூட்டுப்பயிற்சியில் ஈடுபட்டமை கொரிய தீபகற்பத்தில் மீண்டும் பதற்றமான சூழலை ஏற்படுத்தி இருக்கிறது.

பல்வேறு கட்ட பேச்சுகளுக்குப் பிறகு அமெரிக்கா மற்றும் தென்கொரியா உடனான வடகொரியாவின் உறவில் இணக்கமான சூழல் உருவாகி இருந்த நிலையில், இராணுவ கூட்டுப் பயிற்சி விவகாரம் மீண்டும் பிரச்சினைக்கு வித்திட்டுள்ளது.

கூட்டுப்பயிற்சி தொடங்கும் முன்னரே இரு நாடுகளையும் எச்சரிக்கும் விதமாக வடகொரியா தொடர்ந்து ஏவுகணைகளை சோதித்தது. அதனை மீறி கூட்டுப்பயிற்சி நடந்ததால் ஆத்திரம் அடைந்த வடகொரியா, இனி தென்கொரியாவுடன் அமைதிப் பேச்சுக் கிடையாது என அறிவித்தது.

இந்த நிலையில் தென்கொரியா மற்றும் அமெரிக்காவின் இராணுவ நடவடிக்கைகள் தொடர்ந்தால், கொரிய தீபகற்பத்தில் மீண்டும் பனிப்போர் உருவாகும் என வடகொரியா எச்சரித்துள்ளது.

வடகொரியாவுக்கான அமெரிக்காவின் சிறப்பு தூதர் ஸ்டீபன் பீகன், 3 நாள் பயணமாக தென்கொரியா வந்துள்ள நிலையில், வடகொரியா இந்த எச்சரிக்கையை விடுத்திருக்கிறது. இது குறித்து, வடகொரியா வெளியுறவு அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:-

இராணுவக் கூட்டுப்பயிற்சி முடிந்தகையோடு, தென்கொரியா அமெரிக்காவில் இருந்து 'எவ். 35ஏ' போர் விமானங்கள் உட்பட இராணுவத் தளபாடங்களைக் குவித்து வருகிறது. மேலும் அமெரிக்கா தென்கொரியாவில் ஆயுதப் படைகளை உருவாக்க முயற்சிக்கிறது.

இரு நாடுகளின் இராணுவ நடவடிக்கைகள் கொரிய தீபகற்பத்தில் அமைதியைக் கட்டியெழுப்புவதற்கான உரையாடலின் இயக்கவியலைக் குறைத்து, மோதலுக்கு கட்டாயப்படுத்துகின்றன.

இது, கொரிய தீபகற்பத்தில் இருதரப்பினருக்கும் இடையிலான கூட்டு அறிவிப்புகள் மற்றும் இராணுவ ஒப்பந்தத்தை வெளிப்படையாக மறுத்துள்ள மற்றும் கடுமையான ஆத்திரமூட்டும் செயல் ஆகும். இதனால் கொரிய தீபகற்பத்தில் மீண்டும் பனிப்போர் உருவாகும்.

அதே சமயம் பேச்சு மூலம் அனைத்துப் பிரச்சினைகளையும் அமைதியான முறையில் தீர்ப்பதற்கான எங்கள் நிலையில் நாங்கள் மாறாமல் இருக்கிறோம். ஆனால், இராணுவ அச்சுறுத்தல்களுடன் பேச்சைத் தொடர எங்களுக்கு எந்த அவசியமும் இல்லை.

அதாவது, அமெரிக்கா தனது இராணுவ நடவடிக்கையை கைவிடாவிட்டால் அந்த நாட்டுடனான அணு ஆயுதப் பேச்சு முறிந்துபோகும்.

- இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## மனித வடிவிலான 'ரோபோ'வை விண்ணுக்கு அனுப்பிய ரஷ்யா

### இன்று சர்வதேச விண்வெளி மையத்தைச் சென்றடையுமாம்

மொஸ்கோ,ஓக.24

ரஷ்யாவை சேர்ந்த புகழ்பெற்ற விண்வெளி நிறுவனமான ரோஸ்கொஸ்மோஸ் விண்வெளி ஆராய்ச்சிக்காக மனித வடிவிலான 'ரோபோ' ஒன்றை தயாரித்து உள்ளது.

செயற்கை நுண்ணறிவுத் திறனுடன் இயங்கக் கூடிய இந்த 'ரோபோ'வுக்கு 'பெடோர்' என பெயரிட்டுள்ளது. 5 அடி 11 அங்குலம் உயரமும், 160 கிலோ எடையும் கொண்ட இந்த 'ரோபோ'வை சர்வதேச விண்வெளி மையத்துக்கு அனுப்ப ரஷ்யா முடிவு செய்தது. அதன்படி கஜகஸ்தானில் உள்ள ரஷ்யாவுக்கு சொந்தமான பைக்கனூர் விண்வெளி ஏவுதளத்தில் இருந்து 'பெடோர் ரோபோ' உடன் சோயூஸ் ரொக்கெட் நேற்று முன்தினம் விண்ணில் ஏவப்பட்டது. இந்த 'ரோபோ' இன்று (சனிக்கிழமை) சர்வதேச விண்வெளி மையத்தைச் சென்றடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அங்கு 'பெடோர் ரோபோ' மின்சார கேபிள்களை இணைத்தல் மற்றும் துண்டித்தல், தீயை அணைக்கும் கருவியைப் பயன்படுத்துதல் போன்ற மீட்பு பணிகளுக்கான புதிய திறன்களைக் கற்றுக்கொள்ளும் என்று ரஷ்ய விண்வெளி நிறுவனத்தின் வருங்கால திட்டங்கள் மற்றும் அறிவியலுக்கான இயக்குநர் அலெக்சாண்டர் புளோஷென்கோ கூறினார்.

விண்வெளிக்கு ரஷ்யா 'ரோபோ'வை அனுப்பவது இதுவே முதல் முறை ஆகும். எனினும் பெடோர் விண்வெளிக்கு அனுப்பப்பட்ட முதல் ரோபோ அல்ல.

அதிக ஆபத்து நிறைந்த சூழலில் பணிபுரியும் நோக்கத்துடன் அமெரிக்கா 2011 ஆம் ஆண்டு ஒரு 'ரோபோ'வை விண்வெளிக்கு அனுப்பியது.

தொழில்நுட்ப சிக்கல்களால் பாதிக்கப்பட்ட அந்த 'ரோபோ' கடந்த ஆண்டு மீண்டும் பூமிக்கு திரும்பியது. அதேபோல் ஜப்பானும் 2013 ஆம் ஆண்டில் சர்வதேச விண்வெளி மையத்துக்கு ஒரு 'ரோபோ'வை அனுப்பியது நினைவுகூரத்தக்கது.



## சிறுபான்மையினர் மீது வன்முறைகள் பாக்.,சீனாவில் தாராளம் என விசனம்




### ஐக்கிய நாடுகள் சபையில் கவலை தெரிவிப்பு

நியூயோர்க்,ஓக.24

பாகிஸ்தான் மற்றும் சீனாவில் வாழும் சிறுபான்மையினருக்கு எதிரான வன்முறை குறித்து ஐ.நா. சபையில் கேள்வி எழுப்பப்பட்டிருக்கிறது.

ஐக்கிய நாடுகள் சபையில் நேற்று முன்தினம் (வியாழக்கிழமை) நடந்த கூட்டத்தில் சீனாவிலும், பாகிஸ்தானிலும் மத சுதந்திரம் ஒடுக்கப்படுவது குறித்து அமெரிக்கா, இங்கிலாந்து, கனடா ஆகிய நாடுகளின் தலைவர்கள் கேள்வி எழுப்பினர்.

மத சிறுபான்மையினரின் பாதுகாப்புக் குறித்து ஐ.நா. சபையில் நடைபெற்ற பேச்சுகளில் சீனா, பாகிஸ்தான் ஆகிய இரு நாடுகளிலும் சிறுபான்மையினருக்கு எதிராக விதிக்கப்படும் கட்டுப்பாடுகள் குறித்து சர்வதேச நாடுகள் கவலை தெரிவித்தன. குறிப்பாக சீனாவில் உய்கர் இன மக்களுக்கும், பாகிஸ்தானில் கிறிஸ்தவர்கள், இந்துக்கள் உள்ளிட்ட சிறுபான்மையினருக்கும் எதிராக நடைபெறும் அநீதிகள் குறித்தும் விவாதிக்கப்பட்டது.

இந்த இரு நாடுகளும் சிறுபான்மை மக்கள் மீது தொடர்ந்து அடக்குமுறைகளில் ஈடுபட்டு வருகின்றன என அமெரிக்கா, இங்கிலாந்து உள்ளிட்ட சர்வதேச நாடுகள் குற்றம் சாட்டின.

இந்த விவாதத்தின் போது, சீனாவில் தேசிய பாதுகாப்பு என்ற பெயரில் உய்கர் இன மக்களின் மத சுதந்திரத்தை ஒடுக்குவதாகவும், பாகிஸ்தானில் வாழும் சிறுபான்மை இந்துக்கள், கிறிஸ்தவர்கள், சீக்கியர்களை கட்டாய மத மாற்றத்திற்கு உட்படுத்தப்படுகின்றமை மட்டுமல்லாது கடத்தல், கற்பழிப்பு, கொலை உள்ளிட்ட வன்முறைச் சம்பவங்களும் அவர்களுக்கு எதிராக நடைபெறுகின்றன எனவும் குற்றச்சாட்டு எழுந்தது.

அடிப்படை உரிமையும், மத சுதந்திரமும் ஒவ்வொரு தனி மனிதருக்கும் வழங்கப்பட வேண்டியவையாகும். இதனை சீனா மற்றும் பாகிஸ்தான் ஆகிய இரு நாடுகளும் நினைவில் கொள்ள வேண்டும் என சர்வதேச நாடுகள் சார்பில் ஐ.நா. சபையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சுற்றுலா நினைவாக கடற்கரை மணலை போத்தலில் எடுத்துச் சென்ற தம்பதி கைது

ரோம்,ஓக.24

சுற்றுலா நினைவாகக் கடற்கரை மணலை பிளாஸ்ரிக் போத்தலில் சேகரித்த தம்பதிக்கு 6 ஆண்டு சிறை விதிக்கப்படும் சூழல் ஏற்பட்டிருப்பது குறித்த தகவல் வெளியாகி உள்ளது.

இத்தாலியின் சர்தீனியா தீவில் உள்ள கடற்கரைகளில் வெள்ளை மணல் காணப்படுகிறது. மிகவும் மென்மையாகவும், பொன்னிறமாகவும் இருக்கும். இந்த மணலைச் சுற்றுலாப் பயணிகள் அள்ளி செல்வதால் அங்குள்ள கடற்கரைகள் அழிவுப் பாதையை நோக்கிச் செல்கின்றன என சுற்றுச் சூழல் ஆர்வலர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

எனவே கடற்கரை மணலை எடுத்துச் செல்லும் சுற்றுலாப் பயணிகளுக்கு அபராதம் மற்றும் சிறைத் தண்டனை விதிக்கும் சட்டம் அங்கு நடைமுறையில் உள்ளது. இந்த நிலையில் பிரான்ஸைச் சேர்ந்த ஓர் இளம் தம்பதி அண்மையில் சர்தீனியா தீவுக்குச் சுற்றுலா சென்றனர். அவர்கள் சுற்றுலாவை முடித்து விட்டு, பிரான்ஸ் திரும்ப படகு ஏறுவதற்காக காரில் சென்று கொண்டிருந்தனர்.

அப்போது அங்கு வாகன சோதனையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் அவர்களது காரை நிறுத்திச் சோதனை செய்தபோது, காரில் 14 பிளாஸ்டிக் போத்தல்களில் 40 கிலோ எடைகொண்ட கடற்கரை மணல் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. இதையடுத்து, கடற்கரை மணலைத் திருடிய குற்றச்சாட்டில் பொலிஸார் அந்த தம்பதியை கைது செய்தனர்.

ஆனால், தாங்கள் செய்தது சட்டத்துக்கு புறம்பான செயல் என்பது தங்களுக்குத் தெரியாது என்றும், சுற்றுலா வந்ததன் நினைவாகக் கடற்கரை மணலை தாங்கள் எடுத்துச் செல்ல முயன்றனர் எனவும் அந்தத் தம்பதி கூறினர். எனினும் அதனை ஏற்க மறுத்த பொலிஸார் இருவர் மீதும் வழக்குப் பதிவு செய்தனர். இது தொடர்பான வழக்கு விசாரணை உள்ளூர் நீதிமன்றில் நடந்து வருகிறது.

அவர்கள் மீதான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டால், 3000 யூரோ (இலங்கை மதிப்பில் சுமார் ரூ.6 லட்சத்து 50 ஆயிரம்) அபராதமும், 6 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனையும் விதிக்கப்படும்.

காலைக்கதிர் Kalaikathir


# அரசியல் என்பது சாக்கடையா?

## நான் அதன் விளிம்பிலேயே நின்றவாறு அவதானிக்கிறேன்!

வாரத்துக்கொரு கேள்வி வரிசையில் வழமை போன்று வடக்கு மாகாண முன்னாள் முதலமைச் சரும் தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகருமான நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் பதில் அளித்துள்ளார். அவரிடம் கேட்கப்பட்ட கேள்வியும் அவரது விரிவான பதிலும் வருமாறு:-



## அந்த அசுத்தத்தில் காலடி வைக்கவில்லை; இனியும் வைக்கேன்!

**கேள்வி:- நீங்கள் அரசியலுக்கு வந்து ஏறக்குறைய ஆறு வருடங்கள் ஆகின்றன. அரசியல் ஒரு சாக்கடை என்பார்கள். அந்த சாக்கடையில் நீங்கள் எவ்வாறு இதுவரையில் நிலைத்து நிற்கின்றீர்கள்?**

**பதில்:-** வியப்புக்குரிய கேள்வி! இவ்வாறான கேள்வியை நான் எதிர்பார்க்கவில்லை. இந்தக் கேள்விக்குப் பதில் கூற விழைந்தேனானால் எனக்கு அரசியல் ரீதியாக பெரும் பின் விளைவுகள்ஏற்படக்கூடும். ஆனால், அடிப்படையில் நான் ஓர் ஆசிரியன். எந்தக் கேள்வியாக இருந்தாலும் எனக்குப் பதில் தெரியும் என்றால் அதனைக் கேள்வி கேட்பவர்களுடன் பகிர்ந்து கொள்ளவே எனக்கு விருப்பம். அந்த அடிப்படையில் உங்கள் கேள்விக்கும் பதில் தர விழைகின்றேன்.

சாக்கடை என்பது பலரின் அசுத்தங்களை அள்ளிச் செல்லும் ஒரு வடிகால். அரசியலைச் சாக்கடைக்கு ஒப்பிடுவதன் காரணம் அது அசுத்தம் நிறைந்ததாகச் சென்று கொண்டிருப்பதே!

இலங்கையில் அரசியல் இவ்வாறாக என்றென்றும் இருந்தது என்று கூற முடியாது.

நாடு சுதந்திரமடைந்த காலத்தில் அரசியலுக்கு வந்தவர்கள் பணம், படிப்பு, பண்பு ஆகிய குணங்கள் கொண்டிருந்தார்கள். பலர் தமது சொத்துக்களை அரசியல் காரணமாக இழந்தார்கள். ஆனால், அவற்றை அரசியல் மூலமாகத் திரும்பப் பெற முயற் சிக்கவில்லை.

தந்தைசெல்வா, வன்னியசிங்கம் E.M.V. நாக நாதன், தர்மலிங்கம் போன்றவர்களை இதற்கு உதாரணமாகக் கூறலாம். அரசிய லால் தம்மிடம் இருந்த வற்றை இழந்தவர்கள் இவர்கள். தம் மக்களின் நலமே அவர்களுக்கு முதன்மை பெற்றிருந்தது. சுயநலம் அற்று சேவையாற்றினார்கள். சிங்களவருள் S.W.R.D. பண்டாரநாயக்க தமது பல சொத்துக்களை விற்றே அரசியல் செய்தார். இவர்கள் யாவரும் படித்தவர்கள். அவர்களின் பாரம்பரியமும் சூழலும் அவர்களைப் பண்பானவர்களாக நடந்து கொள்ள இடமளித்தது.

பண்பு என்று கூறும்போது இன்னொருவரின் சொத்திலோ சுகத்திலோ கைவைக்க வேண்டும் என்ற எண்ணம் அவர்களுக்கு இருக்கவில்லை. யாவருடனும் மரியாதையுடன் நடந்துகொண்டார்கள். தவறைத் தவறென்று சுட்டிக்காட்டத் தவறவில்லை. ஆனால் அதற்காகத் தமக்கெதிராகத் தவறு செய்தவரை ஜென்ம விரோதியாகவும் பார்க்கவில்லை.

1956லேயே அரசியலில் மாற்றம் ஏற்பட்டது. பண்டாரநாயக்க மக்கள் அரசாங்கம் என்று ஒன்றைக் கொண்டு வந்தார். சாதாரண மக்களைப் நாடாளுமன்றத்தில் இடம்பிடிக்க வைத்த பெருமை அவரையே சார்ந்தது. அதனால் ஏற்பட்ட சமூக மாற்றத்தை எடுத்துக் காட்ட ஒரு நடந்த நிகழ்வைக் கூறுகின்றேன். தேமிஸ் என்பவர் கடிதங்களைப் பரிமாற்றம் செய்யும் தபால்காரர். அஞ்சல் திணைக்களத் தில் பணியாற்றிய அவரை கொழும்பு மத்திக்கு (என்று நினைக்கின்றேன்) தேர்தலில் நிற்கவைத்தார் பண்டாரநாயக்க. மூன்று உறுப்பினர்களைக் கொண்ட கொழும்பு மத்திக்கு தேமிஸ் தேர்வானார். நாடாளுமன்றம் சென்றார்.

அப்போது பண்டாரநாயக்காவின் கட்சிக்குத் தேர்தலில் போட்டியிட்டுத் தோற்றவர் முன்னைய பிரதம மந்திரியாக இருந்த சேர் ஜோன் கொத்தலாவல என்பவர். அவரின் கட்சி தோற்றாலும் அவர் தன் தேர்தல் தொகுதியாகிய தொடங்கஸ்லந்தவில் வென்று நாடாளுமன்றம் சென்றார். நாடாளுமன்ற பிரகாரத்தில் சேர் ஜோனை தேமிஸ் சந்தித்தார். உடனே அவர் ஹலோ ஜோன் என்று தன் கையைக் குலுக்குவதற்காக நீட்டினார். சேர் ஜோனிடம் இருந்து அவருக்குக் கிடைத்தது கைகுலுக்கல் அல்ல.

கன்னத்தைப் பொத்திய ஓர் அறையே கிடைத்தது! தேமிஸை அறைந்து விட்டுசேர் ஜோன் அப்பால் சென்றுவிட்டார். உடனே தேமிஸ் பிரதம மந்திரி பண்டாரநாயக்கவிடம் சென்று முறையிட்டார். அப்போது பண்டார நாயக்க் தேமிஸ்! நாங்கள் கூட அவரை சேர் ஜோன் என்றே மரியாதையுடன் அழைப்போம். உமக்கு நாடாளுமன்றப பதவி கிடைத்து விட்டதால் அவரை முறை தவறி அழைப்பது சரியா? என்று கேட்டார். ஜோன் தானேஅவர் பெயர்? அவர் பெயரைக் கூறி அழைத்ததில் என்ன பிழை? இது தேமிஸின் கேள்வி. எம்மிலும் வயது, தரம், படிப்பில் உயர்ந்தவர்களை அழைக்கும்போது பண்பும் மரியாதையும் எமது அழைப்பில் தொனிக்க வேண்டும்.

உங்கள் அழைப்பு அவ்வாறு தொனிக் காமையே பிழை என்றார் பிரதமர். அந்த சம்பவம் சம்பந்தமாக எந்த நடவடிக்கையையும் எடுக்க மறுத்து விட்டார் பிரதமர். இதை நான் கூறுவதற்குக் காரணம் எம்மிடையே பண்பும் மரியாதையும் விடுபட்டு நிற்கின்றன. பணம் ஒன்றே பரமன் என்ற நிலையிலேயே எம்மவர் தற்போது நடந்து கொள்கின்றார்கள்.

1956 தொடக்கம் நாடாளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட பலர் பணம், படிப்பு, பண்பு ஆகியவற்றைத் தெரியாதவர்களாக இருந்த காரணத்தினாலேயே அரசியலானது மாற்றம் உற்றது.

நான் மட்டக்களப்பு மாவட்ட நீதிபதியாக இருந்தபோது குடும்பநலம் பற்றிய ஒரு கருத்தரங்கத்தில் பங்குபற்றினேன். அப்போது ஒரு கருத்தை வெளியிட்டேன். உலகத்தில் எல்லாவற்றிற்கும் பயிற்சி அளிக்கப் படுகின்றது. ஆனால், இரண்டு முக்கிய விடயங்களுக்கு நாம் பயிற்சி அளிப்பதில்லை. பெற்றோர் குழந்தைகளை வளர்ப்பது எப்படி என்று எமக்கு சொல்லித்தரப்படுவதில்லை. நாட்டை ஆள்வது எப்படி என்று நாடாளுமன்ற அங்கத்தவர்களுக்கு எவரும் சொல்லிக் கொடுப்பதில்லை என்றேன்.

எனக்குப் பின்னர் பேசிய அப்போதைய அமைச்சர் K.W. தேவநாயகம் என்னை வெகுவாகக் கண்டித்துப் பேசினார். பாரம் பரியமாக எமது தாய்,தந்தையர் எம்மை வளர்த்தது போலத்தான் நாம் எம் குழந்தைகளை வளர்த்து வருகின்றோம். அதில் எந்தக் குறைபாடும் வந்துவிடவில்லை. நாடாளுமன்றத்திற்குத் தெரிவாகின்றவர்கள் பல்கலைக்கழகம் செல்லாதவர்களாக இருக்கலாம். ஆனால் அவர்கள் வாழ்க்கை என்னும் சர்வகலா சாலையில் பயின்று பட்டம் பெற்றவர்கள்.

எமது நாட்டின் தந்தை D.S. சேனாநாயக்க அவர்கள் மூன்றாம், நான்காம் வகுப்புகளுக்கு மேல் படிக்கவில்லை. அவர் எமது முதற் பிரதமராக திறனுடன் ஆண்டதை நீதிபதி மறந்துவிட்டார் என்றார். அதற்குப் பதில் அளிக்க எனக்கு வாய்ப்பளிக்கவில்லை. இது நடந்தது 1979 ஆம் ஆண்டில்!

நாடாளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் பணபலம் இல்லாவிட்டாலும் ஓரளவு படிப்புப் பலம் உள்ளவர்களாகவும் பண்புள்ளவர்களாகவும் இருக்க வேண்டும் என்பது எனது கருத்து. அதுவும் தற்காலத்தில் அது மிக மிக அவசியம். ஏனென்றால் இது கணினி யுகம்! யூடியூப் யுகம்!

என்னுடன் சட்டக் கல்லூரியில் கல்வி கற்று சட்டத்தரணியாகத் தொழில் புரிந்த ஒரு சிங்கள நண்பர் 1977ம் ஆண்டு நடந்த தேர்தலில் வெற்றி பெற்று பிரதியமைச்சராகவும் ஆக்கப்பட்டார். நான் உடனே அவருக்கு எனது வாழ்த்தைத் தெரிவித்தேன். தெரிவித்துவிட்டு சரி உனக்குப் பதவி கிடைத்து விட்டது. அடுத்து என்ன செய்வதாக உத்தேசம்? என்று சிங்களத்தில் கேட்டேன். உடனேஅவர் சிங்களத்தில் ஏன் ஓய்! தேர்தலுக்காகச் செலவழித்த பணம் முழுவதையும் நான் திரும்பப் பெறவேண்டாமா? என்றார்.

உண்மையில் அதையே அவர் செய்தார். தேர்தல் செலவுக்காக செலவழித்த தொகையிலும் பார்க்கப் பல மடங்கு பணம் தனது அரசியலின் மூலம் அவர் சம்பாதித்தார். கடைசியில் ஜே.வி.பி.யினரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.


தற்போது பலர் மக்களுக்குச் சேவை செய்யப் போகின்றோம் என்று கூறிக் கொண்டு சுய நல காரணங்களுக்காகவே அரசியலில்நுழைகின்றார்கள். ஒருவர் தேர்தலில் வெல்ல நுழையும் போது பெரும் தொகை பணத்தைச் செலவிட வேண்டியதாக இருக்கின்றது. வென்றால் செலவழித்த பணத்தைத் திரும்பப் பெறவேண்டிய ஒரு கட்டாயம் அவர்களுக்கு வந்து விடுகின்றது. ஆகவே தான் சமூகத்தில் ஊழல் மலிந்து காணப்படுகின்றது. படிப்பும், பண்பும் இல்லாத பணம் படைத்த பலர் வெறும் படாடோபத்திற்காக அரசியலில் நுழைகின்றார்கள். வெற்றி பெற்றபின் அவர்களின் பந்தாவிற்கு ஓர் அளவில்லை. கண்மண் தெரியாமல் ஆட எத்தனிக்கின்றார்கள்.

மேலும் மேலும் பணம் சம்பாதிக்கவும் முயலுகின்றார்கள். தம்மைத் தகுதி உடையவர்களாகக் காட்ட தமது சாதியை, பிராந்தியத்தை, மதத்தைப் பாவிக்கின்றார்கள். இதனால் ஏற்படும் பின் விளைவுகள் பற்றி ஆராய்கின் றார்கள் இல்லை. ஆராயுந்திறனும் அவர் களுக்கு இல்லை. இவற்றை விட பல வெளி நாடுகள் எங்கள் அரசியலுக்குள் மூக்கை உள்நுழைக்கின்றன. இதனால் எமது உறுப்பினர்கள் சுய சிந்தை அற்று நடக்கத் தலைப்படுகின்றனர். இவை யாவும் சேர்ந்தே அரசியல் ஒரு சாக்கடை என்ற பெயரைப் பெற வைத்துள்ளன.

இந்தச் சாக்கடையில் எவ்வாறு இதுவரை யில் நிலைத்து நிற்கின்றீர்கள் என்பதே உங்கள் கேள்வி. நான் சாக்கடையின் விளிம்பில் நின்று அதில் தள்ளிச் செல்லப்படும் அசுத்தங்களை அவதானித்துக் கொண்டு இருக்கின்றேனே ஒழிய இதுவரையில் அந்த அசுத்தத்தில் காலடி எடுத்து வைக்கவில்லை. இனியும் வைக்காது இருக்க இறைவன் துணை புரிய வேண்டும். ✻

# எழுக தமிழுக்கு அணி திரட்ட யாழ்நகரில் துண்டுப் பிரசுரம்!

## விக்கி, சுரேஷ், சிவசக்தி பங்கேற்பு









யாழ்ப்பணம், ஓக. 24

சர்வதேச போர்குற்ற விசாரணையை நடத்து,தமிழ் அரசியல் கைதிகள் அனைவரையும் விடுதலை செய், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் உடனடியாக விசாரணை செய்,வடக்கு கிழக்கில் இராணுவ மயமாக்கலை நிறுத்து,இடம்பெயர்ந்த அனைவரையும் அவர்களது பாரம்பரிய இடங்களில் குடியமர்த்து போன்ற கோரிக்கைகளை முன்னிறுத்தி எதிர்வரும் 16 ஆம் திகதி நடைபெறவுள்ள எழுக தமிழ் நிகழ்வுக்கு மக்களை அணி திரட்டும் வகையில் பிரசார நடவடிக்கை நேற்று ஆரம்பமானது.

நேற்றுக் காலை யாழ் நல்லூர் ஆலய முன்றில் மற்றும் யாழ். பஸ் தரிப்பிடநிலையங்களில் மக்களுக்கு இது தொடர்பான துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் மற்றும் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் மற்றும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன். தமிழ் மக்கள் பேரவையினர் தமிழ் மக்கள் கூட்டணியின் உறுப்பினர்கள், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் உறுப்பினர்கள் மற்றும் பொது அமைப்புக்களை சார்ந்தோர் என பலரும் கலந்து கொண்டனர். (ஐ - 07)

# முஸ்லிம் காங்கிரஸ் இரு எம்.பிக்களும் அமைச்சுப் பதவிகளை ஏற்க தீர்மானம்

கொழும்பு, ஓக. 24

அமைச்சுப் பதவிகளிலிருந்து விலகிய ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் நாடாளுமன்ற உறுப்பினர்களான பைஸால் காசிம் மற்றும் அலிசாஹிர் மௌலானா ஆகியோர் மீண்டும் அமைச்சுப் பதவிகளை எடுப்பதற்குத் தீர்மானம்எடுத்துள்ளனர்னஅந்தக்கட்சி வட்டாரங்கள் குறிப்பிட்டுள்ளன.

கட்சியின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீமின் தலைமையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுக் கூட்டத்தில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது.

இந்த வகையில் இரு இராஜாங்க அமைச்சர்களை நியமிக்குமாறு கோரி பிரதமர் காரியாலயத்திலிருந்து ஜனாதிபதி செயலகத்துக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது. (ஐ)

# எல்ல வனத்தில் தீப்பரவல்!

கொழும்பு, ஓக. 24

எல்ல வனப்பகுதியில் நேற்றுமுன்தினம் காலை முதல் தீ பரவி வருவதால் இயற்கை வனம் அழியும் அபாயம் ஏற்பட்டுள்ளதுடன் அங்குள்ள உயிரினங்களுக்கும் பாதிப்பு ஏற்படும் அபாய நிலைமை உள்ளது.



தீயை அணைக்க உரிய நடவடிக்கைகளை அரசு எடுக்கவில்லையெனச் சுற்றாடல் ஆர்வலர்கள் தெரிவித்துள்ளனர். (ஐ)

# இலங்கைக்கு காலஅவகாசம் இனியும் வழங்கவே கூடாது

## சிவாஜிலிங்கம் வலியுறுத்தல்



யாழ்ப்பாணம், ஓக. 24

இலங்கையில் நடைபெற்ற போர்க்குற்றம் தொடர்பில் கலப்பு நீதிமன்ற விசாரணைக்கான கால நீடிப்பை ஐ.நா. உடனடியாக முடிவுக்குக் கொண்டு வருவதுடன் இலங்கை அரசைச் சர்வதேச குற்றவியல் நீதிமன்றுக்குக் கொண்டு சென்று போர்க்குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ள அத்தனை பேரையும் உடனடியாக விசாரிக்கச் சர்வதேசம் களத்தில் இறங்கவேண்டும் என முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இராணுவத்தளபதியின் நியமனம் தொடர்பில் நேற்றுமுன்தினம் ஊடகங்களைச் சந்தித்து கருத்துக்களை வெளியிடும்போது இவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றச்சாட்டுக்களில் ஈடுபட்ட முக்கிய இராணுவ அதிகாரியான சவேந்திர சில்வாவுக்கு தற்போதைய கூட்டு அரசு இராணுவத்தளபதி நியமனத்தை வழங்கியுள்ளது. இந்த நியமனம்– நாம் சர்வதேசத்துக்கு எந்தச் சந்தர்ப்பத்திலும் அடி பணியமாட்டோம் என்பதை வெளிப்படுத்தியுள்ளது.

அத்துடன் தமிழ் மக்களுக்கு இந்த அரசு துரோகம் செய்துள்ளது. இராணுவத் தளபதியின் நியமனமானது தமிழர்களுக்கு மட்டுமல்லாது சர்வதேசத்துக்கு எதிரான போர்ப் பிரகடனத்தை கொண்டு வரும் ஓர் நிலை ஏற்பட்டுள்ளது.

இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் ஐ.நா.அலுவலகம் தொடக்கம் பல விசாரணைகள் இடம்பெற்றிருந்தன. அவ்வாறு இடம்பெற்றிருந்த விசாரணைகள் அனைத்திலும் போர்க்குற்றச்சாட்டுக்களில் ஈடுபட்டார் என இனங்காணப்பட்ட சவேந்திர சில்வாவிற்கு மைத்திரி – ரணில் அரசு இராணுவத் தளபதி நியமனத்தை வழங்கியுள்ளது. இந்தச் சம்பவத்தை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

– என்றார். (ஐ - 07)

northern PC Park

கணினி உலகில் நம்பகமான சேவையில் 10 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்

வடக்கின் கணினிப் பூங்கா

# 10, Muddaskada Junction Stanly Road, Jaffna

தரமான கணினிகளைப் பெற்றுக் கொள்ள நம்மை நாடுங்கள்

www.pcpark.co
info.pcpark.co

Northern Pc Park
NPcpark
northernpcpark
Northern Pc Park

0777570124 0215675566
0773366443 0212229581
0766999597 0212222050
0717772377 0212220388

# வாரத்தில் ஒரு நாள் ஆங்கிலமொழி தினம்

## ஆசிரியர்கள் – மாணவர்கள் ஆங்கிலத்தில் மட்டுமே பேச முடியும்

கொழும்பு, ஓக. 24

அனைத்துப் பாடசாலைகளிலும் வாரத்தில் ஒரு நாளை, ஆங்கில மொழி நாளாகப் பெயரிடுவதற்கு கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

அந்த நாளில் ஆசிரியர்கள், மாணவர்களுடன் ஆங்கில மொழியிலேயே கலந்துரையாட வேண்டும் என அதிபர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் எம்.எம். ரத்னாயக்க தெரிவித்துள்ளார்.

பாடசாலைகளில் ஆங்கிலமொழி கற்றுக் கொடுக்கப்படுகின்ற போதிலும், பெரும்பாலான மாணவர்கள் ஆங்கில மொழி பேசுவதில் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். இதனாலேயே, வாரத்தில் ஒருநாளை ஆங்கிலமொழியில் கலந்துரையாடுவதற்காக ஒதுக்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் அன்றாட நாளில் பயன்படுத்தப்படும் வார்த்தைகள், மாணவர்களுக்கு பரீட்சயமாவதுடன் அதனூடாக ஆங்கிலமொழியில் சரளமாகப் பேசுவதற்கு அவர்களால் இயலும்.

இது குறித்து பாடசாலை அதிபர்களுக்கும் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது என்று கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் மேலும் தெரிவித்தார். (ஐ)

# இந்திய அணியின் துடுப்பாட்ட பயிற்சியாளராக விக்ரம் ரத்தோர் தெரிவு




இந்திய கிரிக்கெட் அணியின் புதிய துடுப்பாட்ட பயிற்சியாளராக விக்ரம் ரத்தோர், தெரிவு செய்யப்பட்டுள்ளார். இதனை இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை உறுதி செய்துள்ளது.

மேலும், இதற்கு முன்னதாக இருந்த பந்துவீச்சுப் பயிற்சியாளர் பரத் அருண் மற்றும் களத்தடுப்புப் பயிற்சியாளர் ஆர் ஸ்ரீதர் ஆகியோர் தங்களது பணிகளை தொடருவர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய அணியின் உடல்தகுதி நிபுணராக நிதின் பட்டேல் மீண்டும் நியமிக்கப்படுகிறார். மேற்கிந்திய தீவுகள் மண்ணில் இந்திய தூதரக அதிகாரிகளுடன் ஒழுங்கீனமாக நடந்து கொண்ட இந்திய அணியின் நிர்வாக மேலாளர் சுனில் சுப்பிரமணியம் அந்த பொறுப்பில் இருந்து கழற்றி விடப்பட்டார். அவருக்கு பதிலாக அணியின் புதிய மேலாளராக கிரிஷ் டோங்ரே தேர்வாகிறார்.

இந்திய கிரிக்கெட் சபை தலைமை செயல் அதிகாரி ராகுல் ஜோரி, புதிய துடுப்பாட்ட பயிற்சியாளராக விக்ரம் ரத்தோர் தெரிவு செய்யப்பட்டமை குறித்து கூறுகையில்,

'விக்ரம் ரத்தோருக்கு போதுமான அனுபவம் உள்ளது. பயிற்சியாளருக்குரிய அவரது திறமையில் எங்களுக்கு திருப்தி அளிக்கிறது' என கூறினார்.

இந்திய அணியின் முன்னாள் ஆரம்ப துடுப்பாட்ட வீரரான விக்ரம் ரத்தோர், இந்திய அணிக்காக 7 ஒரு நாள் போட்டியில் விளையாடி 193 ஓட்டங்களை பெற்றுள்ளார். 6 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 133 ஓட்டங்களை எடுத்துள்ளார்.

இவர், சர்வதேசப் போட்டிகளில் சாதிக்காவிட்டாலும் முதல்தர கிரிக்கெட்டில் 146 போட்டிகளில் விளையாடி 33 சதம் உட்பட 11,473 ஓட்டங்கள் குவித்துள்ளார்.

பஞ்சாப்பை சேர்ந்த 50 வயதான விக்ரம் ரதோர், முன்னாள் தேர்வுக்குழு தலைவரான சந்தீப் படேல், அடங்கிய தேர்வு குழுவில் உறுப்பினராகவும் இருந்துள்ளார்.

இந்தியா அணி, உலகக்கிண்ணத் தொடரின் அரையிறுதிப் போட்டியில் தோல்வியடைந்ததால் அணியின் தலைமைப் பயிற்சியாளராக இருந்த ரவி சாஸ்திரி உள்ளிட்ட பயிற்சியாளர் குழுவை மாற்ற அணி நிர்வாகம் தீர்மானித்தது.

இதற்கான விண்ணப்பங்களும் கோரப்பட்டன. இதில் பல இந்தியாவின் முன்னாள் வீரர்களும், வெளிநாட்டு பயிற்சியாளர்களும் விண்ணப்பித்தனர்.

எனினும், கடுமையான போட்டிக்கு மத்தியில் கபில்தேவ், கெய்க்வாட், சாந்தா ரங்கசுவாமி அடங்கிய 3 பேர் கொண்ட குழு, இந்திய கிரிக்கெட் அணியின் தலைமை பயிற்சியாளராக மீண்டும் ரவி சாஸ்திரியை தேர்வு செய்தது.


இதனையடுத்து மீதமிருந்த துடுப்பாட்ட, பந்துவீச்சு மற்றும் களத்தடுப்பு பயிற்சியாளர்களை தேர்வு செய்யும் பணியை தேர்வுக்குழு உறுப்பினர்கள் மேற்கொண்டு வந்தனர்.

இதில் துடுப்பாட்ட பயிற்சியாளர் பதவிக்கு விண்ணப்பித்தவர்களில் 14 பேரிடம் நேர்காணல் செய்தனர். இதில் இருந்து மூன்று பேர் கொண்ட இறுதிப்பட்டியல் தயார் செய்யப்பட்டது. அதில் விக்ரம் ரத்தோர், சஞ்சய் பாங்கர், மார்க் ராம் பிரகாஷ் ஆகிய மூன்று பேர் இடம் பிடித்தனர்.

இதில், முன்னாள் சஞ்சய் பாங்கர் மற்றும் விக்ரம் ரத்தோர் ஆகியோருக்கிடையில் கடும் போட்டி நிலவியது. இறுதியில் விக்ரம் ரத்தோர் தெரிவுசெய்யப்பட்டார்.

பந்துவீச்சுப் பயிற்சியாளர் பதவிக்கு 12 பேரிடம் நேர்காணல் நடத்தப்பட்டது. இதில் இருந்து மூன்று பேர் கொண்ட இறுதிப்பட்டியலை தயார் செய்யப்பட்டது. அதில் பரத் அருண், பராஸ் மம்ப்ரே, வெங்கடேஷ் பிரசாத் ஆகிய மூன்று பேர் இடம் பிடித்தனர். இதில் மீண்டும் பரத் அருண் பயிற்சியாளராக நியமிக்கப்பட்டார்.

களத்தடுப்புப் பயிற்சியாளர் பதவிக்கு 9 பேரிடம் நேர்காணல் நடத்தப்பட்டது. இதில் இருந்து மூன்று பேர் கொண்ட இறுதிப்பட்டியல் தயார் செய்யப்பட்டது. இதில் ஆர் ஸ்ரீதர், அபேய் சர்மா, டி திலிப் ஆகிய மூன்று பேர் இடம் பிடித்தனர். இறுதியாக ஆர் ஸ்ரீதர் மீண்டும் பயிற்சியாளராக நியமிக்கப்பட்டார்.(ஐ)




# மெஸ்ஸி தான் என்னை சிறந்த வீரர் ஆக்கினார்!

மெஸ்ஸி தான் தன்னை சிறந்த வீரராக உருவாக்கினார் என போர்த்துக்கலின் நட்சத்திர வீரர் கிறிஸ்டியானோ ரொனால்டோ தெரிவித்துள்ளார்.

இந்தத் தலைமுறையின் தலைசிறந்த வீரர்களாகக் கருதப்படுபவர்கள் ஆர்ஜென்ரீனாவின் லியோனல் மெஸ்ஸி, போர்த்துக்கலின் கிறிஸ்டியானோ ரொனால்டோ.

இருவரும் சர்வதேச போட்டிகளில் விளையாடு வதனை காட்டிலும், கழக அணிகளுக்காக விளையாடிய போது கடும் போட்டியுடன் விளையாடினர்.

ஸ்பெயினில் நடைபெறும் லா லிகா உதைபந்து தொடரில், மெஸ்ஸி பார்சிலோனா அணிக்கும், ரொனால்டோ ரியல் மட்ரிட் அணிக்காகவும் விளையாடிய போது, இருவரும் கடும் போட்டியாளர்களாக பார்க்கப்பட்டனர். அத்தோடு இவர்கள் சாதனைகளையும் பறிமாற்றிக் கொண்டனர்.

பின்னர் ரொனால்டோ இத்தாலியின் ஜுவண்டஸ் அணிக்கு மாறினார். இதன்பிறகு இவர்களுக்கிடையிலான மோதல் குறைந்துவிட்டது.

ஆனால், ரொனால்டோ, மெஸ்ஸியை சீண்டும் வகையில் இத்தாலிக்கு வந்து தன்னுடன் போட்டி போடுமாறு சீண்டினார். இவ்வாறு இருவருக்கும் இடையில் அவ்வப்போது கருத்து மோதல்களும் இருப்பது உண்டு.

இந்த நிலையில், அனைவருக்கும் ஆச்சரியமளிக்கும் வகையில், லியோனல் மெஸ்ஸி தான் தன்னை சிறந்த வீரராக உருவாக்கினார் என ரொனால்டோ கூறியுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறுகையில்,

நான்ரியல் மட்ரிட் அணியில் இருந்து இத்தாலியின் ஜுவான்டஸ் அணிக்குச் செல்லும்போது மிகவும் ஏமாற்றம் அடைந்தார் என மெஸ்ஸி ஏற்கனவே சொல்லியிருக்கிறார். ஏனென்றால் எங்களுக்கு எதிராக கடும் போட்டி நிலவியது. அவரது பக்கத்தில் இருந்து வந்த இந்த கருத்தை நான் மிகவும் இரசிக்கிறேன்.

மெஸ்சி என்னை சிறந்த வீரராக உருவாக்கினார். அதேபோல் நானும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. நான் விருதுகளையும், கிண்ணங்களையும் வெல்லும்போது அவருக்கு தேள் கொட்டியது போன்று இருக்கும். அவர் வெற்றி பெறும்போது எனக்கும் அதேபோல் இருக்கும்.

எங்களுக்கு இடையில் தொழில்முறையிலான தொடர்பு சிறப்பாக உள்ளது. ஏனென்றால் 15 வருடங்களாக உதைபந்துப் போட்டியில் விளையாடி வருகிறோம். நாங்கள் ஒருபோதும் இணைந்து இரவு உணவு சாப்பிட்டது கிடையாது. ஆனால், வருங்காலத்தில் இப்படித்தான் இருக்கும் என்பதை என்னால் பார்க்க முடியவில்லை. இதில் எந்தப் பிரச்சினையும் இருப்பதாக நான் பார்க்கவில்லை என கூறினார்.

இதேவேளை, இரசிகர்கள் நன்மதிப்பு குறித்து கேள்வி எழுப்பும்போது, அது காயத்தை ஏற்படுத்துகிறது. ஏனென்றால், எனக்கு மிகப்பெரிய குடும்பம் உள்ளது. எனது மனைவி, அறிவார்ந்த குழந்தைகள் ஏராளமான விஷயங்களை புரிந்து கொண்டுள்ளனர்.

இதனால் நான் என்னுடைய வழக்கமானதை வெளிப்படுத்த முடியவில்லை. ஆனால், மீண்டும் ஒருமுறை என்னுடைய அப்பாவித்தனம் நிரூபிக்கப்பட்டுள்ளது. இது என்னை பெருமைப்பட வைக்கிறது' என கூறினார்..

# ஜப்பான் கோடைக்கால ஒலிம்பிக் போட்டிகளுக்கு ஆடம்பர ரிக்கெட்

ஜப்பானில் எதிர்வரும் 2020ஆம் ஆண்டு நடைபெறவுள்ள கோடைக்கால ஒலிம்பிக் போட்டிகள், கோடைகால பரா ஒலிம்பிக் போட்டிகளுக்கான விளையாட்டு அரங்குகளின் நிர்மாணப் பணிகள் தற்போது தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில், தயார்படுத்தல்களும் ஒவ்வொரு கட்டமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதற்கமைய தற்போது, போட்டி ஒருங்கிணைப்பாளர்கள் சகல வசதிகளுடன் கூடிய ஆடம்பர ரிக்கெட்டை அறிமுகப்படுத்தியுள்ளனர்.

சர்வதேச சமையல்காரர்களால் தயாரிக்கப்பட்ட உணவு, சிறந்த வயின் வகைகள், நினைவுப் பரிசு, முதற்தர தனிப்பட்ட சேவை, சொகுசு இருக்கை போன்ற பல்வேறு வசதிகளுடன் குறித்த ஆடம்பர ரிக்கெட் சேவைக்குள் அடங்குகின்றன.

கோலாகலமான தொடக்க விழா, நிறைவு விழா மற்றும் 9 நாட்கள் நடக்கும் தடகளப் போட்டிகளை முழுமையாக பார்க்க வகை செய்யும் இந்த ரிக்கெட்டின் விலை 6,000 அமெரிக்க டொலர்கள் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.


ஏற்கனவே 33 விளையாட்டுகளுக்கு ரிக்கெட் கட்டணம் குறைந்தபட்சம் முதல் அதிகபட்சம் வரை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதற்கான ரிக்கெட் விற்பனை கடந்த ஏப்ரல் மாதமே ஆரம்பமாகி விட்டது.

2,500 யென் தொடங்கி 3,00,000 யென் வரை ரிக்கெட் கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

வெளிநாடுகளைச் சேர்ந்த இரசிகர்கள் அடுத்த ஆண்டு ஜுன் 15ஆம் திகதி முதல் அங்கீகாரம் பெற்ற விற்பனையாளர்கள் மூலம் தங்கள் நாட்டிலேயே ரிக்கெட் பெற்றுக் கொள்ளலாம்.

ரிக்கெட் கேட்டு ஒன்லைனில் விண்ணப்பிக்கும் இரசிகர்களுக்கு குலுக்கல் முறையில் ரிக்கெட் ஒதுக்கப்படுகிறது. லட்சக்கணக்கான உள்ளூர் ரசிகர்கள் ரிக்கெட் கிடைக்காமல் காத்திருக்கிறார்கள்.

உலகின் மிகப்பெரிய விளையாட்டு திருவிழாவான ஒலிம்பிக் விளையாட்டுக்கு ரிக்கெட்டுக்கு கடும் கேள்வி, காணப்படுவதால் ஏற்கனவே ரிக்கெட் வாங்கியவர்கள் அதை கூடுதல் தொகைக்கு மறு விற்பனை செய்ய வாய்ப்புள்ளது.



## காணாமற்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெறுமனே கண்துடைப்பு நடவடிக்கைகளுக்காக யாழ்ப்பாணத்தில் இந்த அலுவலகத்தைத் திறப்பதை எதிர்க்கும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் வடக்கு – கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த அமைப்புக்கள் விடுத்துள்ள கோரிக்கையை நான் ஆதரிக்கின்றேன். அரசு ஏமாற்று நடவடிக்கைகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகத்தின் பிராந்திய கிளை இன்று திறக்கப்படவுள்ளது தொடர்பில், அவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில்,

காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகத்தை யாழ்.மாவட்டத்தில் திறக்கக்கூடாது என்று வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் வடகிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த அமைப்புக்கள் விடுத்துள்ள கோரிக்கை நியாயமானது.

காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகம் இதுவரை காலமும் செயற்பட்டுவந்த விதம் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளுக்கு எந்தவிதமான பயனையும் பெற்றுக்கொடுக்க வில்லை. மாறாக, ஐ.நா. மனித உரிமைகள் சபையில் கொண்டு வரப்பட்ட தீர்மானம் தொடர்பிலான ஒரு கண்துடைப்பு நடவடிக்கையாகவும் சர்வதேச சமூகத்தை ஏமாற்றும் ஒரு நடவடிக்கையாகவுமே இந்த அலுவலகத்தின் செயற்பாடுகள் அமைந்துள்ளதாகப் பல தடவைகள் எமது மக்கள் குற்றம் சாட்டியிருக்கின்றார்கள்.

இறுதி யுத்தத்தின்போது வெள்ளைக்கொடிகளுடன் சரண் அடைந்த ஏராளமானவர்கள் காணாமற்போன சம்பவத்துடன் நேரடி தொடர்புபட்டதாக குற்றம் சாட்டப்பட்டுள்ள மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவுக்கு இலங்கை இராணுவத் தளபதி பதவி வழங்கப்பட்டுள்ள நிலையில் காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகத்தை யாழ்ப்பாணத்தில் திறக்க எடுக்கும் முயற்சி அப்பட்டமான ஒரு நாடகமாகும்.

காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகத்தின் கடந்த கால செயற்பாடுகளைப் பார்க்கின்ற போது தெளிவான எந்த இலக்குகளோ, கால அட்டவணையோ அல்லது காணாமல் ஆக்கப்பட்ட மக்களின் உறவினர்களின் துயரங்களைப் போக்கும் எந்தப் பொறிமுறைகளுமோ இன்றியே அது செயற்பட்டு வருவதைக் காண முடிகிறது.

காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகத்தினால் கடந்த வருடம் செப்ரெம்பர் மாதம் அளவில் வெளியிடப்பட்ட இடைக்கால அறிக்கை அதன் இரகசிய நிகழ்ச்சி நிரலை வெளிப்படையாக எடுத்துக்காட்டுகின்றது. அந்த அறிக்கையில், இந்த அலுவலகத்துக்கு முறைப்பாடு செய்யப்பட்ட சம்பவங்கள் குறித்தே கவனம் செலுத்தப்பட்டுள்ளதைக் காண முடிகின்றது. இந்த அலுவலகத்துக்கு முறைப்பாடு செய்யப்படாத ஏராளமான காணாமல்போன சம்பவங்கள் இருக்கின்றன. ஆனால், அவை தொடர்பில் இந்த அலுவலகம் கரிசனை கொண்டிருப்பதாகத் தெரியவில்லை.

உதாரணமாக, மன்னார் மாவட்டத்தின் முன்னாள் பேராயர் வணக்கத்துக்குரிய இராயப்பு ஜோசப் அரச ஆவணங்களின் தரவுகளை ஆராய்ந்து 146,679 பேர் இறுதி யுத்தத்தின்போது காணாமல்போனதாகக் கூறியிருந்தார். ஆனால், இது தொடர்பில் இந்த அலுவலகம் கவனஞ் செலுத்திஆய்வுகளை மேற்கொண்டிருப்பதாகத் தெரியவில்லை. வெறுமனே கிடைக்கப்பெறும் முறைப்பாடுகளின் அடிப்படையில் அல்லாமல், உண்மையிலேயே எத்தனை பேர் காணாமல் ஆக்கப்பட்டனர் என்பதை அறிவதற்காக ஆவணங்கள், சுற்றறிக்கைகள், அறிக்கைகள், ஊடக அறிக்கைகள் மேலும் மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமான நிறுவனங்கள் ஆகியவற்றில் இருந்து பெற்றுக் கொள்ளக் கூடிய தரவுகள் போன்றவற்றை ஆய்வுக்கு உட்படுத்தும் பொருத்தமான ஒரு முறைமையை (methodology) இந்த அலுவலகம் மேற்கொள்ளவில்லை.

காணாமல் போன சம்பவம் தொடர்பில் முறைப்பாடு செய்வதற்கு எவருமே மிஞ்சாமல் ஏராளமான குடும்பங்கள் முழுமையாகவே அழிக்கப்பட்டுள்ளன. அக் குடும்பங்கள் பற்றி எல்லாம் கண்டறிவது பற்றி இந்த அலுவலகம் முயற்சிகள் எடுத்ததாக எமக்குத் தெரியவில்லை. அதேபோல காணாமல் போன உறவினர்கள் தொடர்பில் முறைப்பாடுகளைச் செய்வதற்கு புலம்பெயர்ந்து வாழும் மக்களுடன் தொடர்பு கொள்ள உரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டதாகவும் எமக்குத் தெரியவில்லை. சர்வதேச நாடுகளையும் ஐநா மனித உரிமை ஆணைக் குழுவையும் ஏமாற்றும் வகையில் வார்த்தை ஜாலங்களே இந்த அலுவலகத்தின் இடைக்கால அறிக்கையில் அதிகம் காணப்பட்டன.

முறைப்பாடு செய்யப்பட்டு அடையாளம் காணப்பட்ட காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் உரிய நிவாரணத்தை வழங்குவதற்கு அதிகாரம் இல்லாத ஒன்றாகவே இந்த அலுவலகம் இன்று வரை செயற்பட்டு வருகின்றது.

ஆகவே தான், வெறுமனே கண்துடைப்பு நடவடிக்கைகளுக்காக யாழ்ப்பாணத்தில் இந்த அலுவலகத்தை திறப்பதை எதிர்க்கும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் வடகிழக்கு மாகாணங்களை சேர்ந்த அமைப்புக்கள் விடுத்துள்ள கோரிக்கையை நான் ஆதரிக்கின்றேன். அரசாங்கம் ஏமாற்று நடவடிக்கைகளில் ஈடுபடுவதைத்தவிர்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன் – என்றுள்ளது. (ஐ)

## கஜேந்திரகுமாரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்ற நம்பிக்கை உண்டு.

– இப்படிக் கூறியிருக்கிறார் முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமுமான க.வி.விக்னேஸ்வரன்.

தமிழ் மக்கள் பேரவையால் நடத்தப்படவுள்ள எழுக தமிழ் பேரணிக்கான பரப்புரை நல்லூரில் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்தப் பரப்புரை நிகழ்வில் கலந்துகொள்வது தொடர்பாக பேரவைக்கும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கும் இடையில் சந்திப்புக்கள் இடம்பெற்றிருந்தன. ஆனால் அந்தச் சந்திப்புக்கள் வெற்றியளிக்காத காரணத்தினால் பரப்புரையில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் கலந்து கொள்ளவில்லை. இது தொடர்பில் விக்கினேஸ்வரனிடம் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

கொள்கை ரீதியாக அவர்கள் எங்களோடு சேர்ந்தவர்கள். ஆனால் தனிப்பட்ட காரணங்களுக்காக அவர்கள் விடுபட்டு நிற்கின்றார்கள்.

ஒரு காலத்தில் அவர்களும் வந்து எங்களோடு சேருவார்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு உண்டு. ஆகையினால் அதைப் பற்றி இப்போது பெரிதாக அலட்டிக் கொள்ளவேண்டிய அவசியமில்லை என்று தான் கருதுகின்றேன் – என்றார். (ஐ-07)

## காணிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தக் கலந்துரையாடலுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருடன் படைத்தளபதிகள், வனவளத் திணைக்களம், தொல்பொருள் திணைக்களம் ஆகியவற்றின் அதிகாரிகள், அமைச்சுக்களின் செயலாளர்கள் ஆகியோருக்கும் அழைத்து பிரச்சினைகளுக்குத் தீர்வு எட்டப்படும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் நேற்று முக்கிய சந்திப்பு ஒன்று ஜனாதிபதி செயலகத்தில் நடந்தது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் அதன் தலைவர் இரா.சம்பந்தன், நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, த.சித்தார்த்தன், செல்வம் அடைக்கலநாதன், எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

வழக்கமாக முக்கிய சந்திப்புக்களில் இரா.சம்பந்தனே அதிகம் பேசுவது வழக்கம். ஆனால் நேற்று நடந்த சந்திப்பில் இரா. சம்பந்தன் பேசவில்லை. மாவை சேனாதிராசாவிடம், பிரச்சனைகளைப் பேசும்படி குறிப்பிட்டார். அவருடன் ஏனைய எம்.பிக்களும் பிரச்சினைகள் குறித்து பேசினர்.

தொல்பொருள் திணைக்களம், வனஜீவராசிகள் திணைக்களம் என்பவற்றால் மக்கள் பாதிக்கப்படுவது, காணிகள் விடுவிக்கப்படாதமை, பௌத்த பிக்குகளால் கன்னியா, நீராவியடி உள்ளிட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்படும் அத்துமீறல்கள் குறித்து கூட்டமைப்பின் எம்.பிக்கள் ஜனாதிபதிக்கு விரிவாக எடுத்துரைத்தனர்.

அத்துடன் படைத் தரப்பின் கெடுபிடிகள் தொடர்பிலும் கூட்டமைப்பின் எம்.பிக்கள் காரசாரமான கருத்துக்களை முன்வைத்தனர்.

எதிர்வரும் 30ஆம் திகதி ஜனாதிபதி யாழ்ப்பாணத்துக்கு பயணம் செய்யும்போது, காணி விடுவிப்பு தொடர்பான அறிவித்தலை வெளியிடவேண்டுமென மாவை சேனாதிராசா எம்.பி. குறிப்பிட்டார். இதன்போது, குறுக்கிட்ட இரா.சம்பந்தன், அறிவித்தல் விடுப்பதல்ல, காணியை விடுவிக்கவேண்டும்–என்றார். எனினும், ஜனாதிபதி அது குறித்து தெளிவான பதிலை வழங்கவில்லை.

நேற்று ஜனாதிபதி நேரநெருக்கடியான பல நிகழ்ச்சிகளை கொண்டிருந்ததாலும், சம்பந்தப்பட்ட விடயங்களை ஆராய அதிகாரிகளோ, ஜனாதிபதியின் செயலாளர் போன்றவர்களோ அங்கு இருக்காததாலும் மீண்டும் இரண்டு தரப்பும் சந்தித்துப் பேசுவதென முடிவாகியது. இதன்போது காணி விடுவிப்பு உட்பட பல பிரச்சினைகள் தொடர்பில் இறுதித் தீர்மானம் ஒன்றை மேற்கொள்வது எனவும் கூறப்பட்டது.

இதன் படி எதிர்வரும் 28ஆம் திகதி முற்பகல் 11 மணிக்கு ஜனாதிபதி செயலகத்தில் இந்தச் சந்திப்பு நடக்கும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எம்.பிக்கள், அமைச்சின் செயலாளர்கள், திணைக்கள அதிகாரிகள் அனைவரையும் உள்ளடக்கியதாக இந்த கூட்டம் நடைபெறும் என அறிவிக்கப்பட்டது. (ஐ)

## பொது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பால சிறிசேன நடைமுறைப் படுத்தியுள்ளார்.

நாட்டில் நடைமுறைப் படுத்தப்பட்டிருந்த அவசரகாலச் சட்டம் நேற்று முன் தினம் வியாழக்கிழமையுடன் காலாவதியான நிலையில் இந்தப் பிரகடனத்தை ஜனாதிபதி நேற்று வெள்ளிக்கிழமை தொடக்கம் நடைமுறைப்படுத்தியுள்ளார்.

பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 40ஆவது அத்தியாயத்தின் 12ஆம் பிரிவின் நாட்டிலுள்ள 25 மாவட்டங்களிலும் பொது அமைதியைப் பேணுவதற்காக முப்படையினருக்கு இதன் மூலம் அதிகாரமளிக்கப் பட்டுளளது.

அதனடிப்படையில் பொலிஸாருக்கு உள்ள சோதனையிடுதல், கைது செய்தல் உள்ளிட்ட அதிகாரங்கள் முப்படையினருக்கும் வழங்கப்பட்டுள்ளது. (ஐ)

## மஹிந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதன்போது தற்போதைய அரசியல் நிலவரங்கள் குறித்து இருவரும் நீண்ட நேரம் உரையாடினர் என அறியமுடிந்தது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தரப்புக்கு ஆதரவை வழங்க ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எந்தவொரு முடிவையும் எடுக்கக் கூடாதெனச் சந்திரிகா இதன்போது தெரிவித்துள்ளார். அப்படியான முடிவுகள் எடுக்கப் படுமாயின் அதற்கெதிராகச் சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்களைத் திரட்டத் தாம் தயாராக இருக்கிறார் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறாயினும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான அறிவிப்பு வந்த பின்னர் இது குறித்து முடிவை எடுக்கலாமென ஜனாதிபதி இந்தச் சந்திப்பின்போது தெரிவித்துள்ளார். (ஐ)

## எழுக தமிழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

– இவ்வாறு கோரியுள்ளார் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன்.

தமிழ் மக்கள் பேரவையினால் நடத்தப்படவுள்ள எழுக தமிழ் பேரணிக்கான பரப்புரை நிகழ்வை நல்லூரில் ஆரம்பித்து வைத்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

செப்ரெம்பர் மாதம் 16 ஆம் திகதி எழுக தமிழ் பேரணி நடைபெற இருக்கின்றது. தமிழ் மக்களின் பல்வேறுபட்ட பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றனர். முன் எப்போதும் இல்லாமல் இப்போது மிக நெருக்கடியான நிலைமைகளைச் சந்திக்க வேண்டியிருக்கின்றது.

தமிழ் மக்களின் புராதன இடங்கள் அழிக்கப்படுகின்றன. புத்த கோவில்கள் உருவாக்கப் படுகின்றன. அரசு உத்தரவாதமளித்தும் கூட அரசியல் கைதிகள் சிறைச்சாலைகளில் வாடுகின்றனர். நிலங்கள் முழுமையாக விடுவிக்கப்படவில்லை. காணாமலாக்கப்பட்டவர்கள் சம்பந்தமாக நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. இவ்வாறு பல நடவடிக்கைகள் தொடர்ந்த வண்ணமே இருக்கின்றன. ஐ.நா .மனித உரிமைகள் ஆணையகத்தில் ஏற்றுக்கொண்ட தீர்மானங்கள் எதுவுமே நடைமுறைப்படுத்தப்படவில்லை.

இவ்வாறான சூழலில் ஜனாதிபதித் தேர்தலும் வரவிருக்கின்றது. ஆகவே இதற்கு முன்பாக தமிழ் மக்கள் தங்கள் மனோ நிலைமையை ஒருமித்துக் காட்டுவதற்கும், தங்கள் கருத்துக்களை வெளியில் சொல்வதற்கும், வரக்கூடிய தேர்தலில் தமிழ் மக்களின் கோரிக்கைகளை எவர் ஏற்றுக் கொள்கிறாரோ அவருக்கு வாக்களிப்பது என்ற சூழலை உருவாக்குதவற்குமாக இந்த 16 ஆம் திகதி இந்தப் பேரணி நடைபெறுகின்றது.

ஆகவே இலங்கையில் இருக்கக் கூடிய சகல தமிழ் மக்களும் அது வடக்கு – கிழக்கு என்பதற்கப்பால் கொழும்பிலும் ஏனைய இடங்களிலும் இருக்கக்கூடிய அனைத்து தமிழ் மக்களும் பேரணியை பிரமாண்டமாக நடத்த உதவவேண்டும்–என்றார். (ஐ-07)

## ராஜபக்ஷாக்களை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போட்டியிடுவார். ராஜபக்ஷாக்களைத் தோற்கடிக்கக்கூடிய வேட்பாளர் அவரே ஆவார்.

– இவ்வாறு நிதி அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக சஜித் பிரேமதாஸவைக் களமிறக்குமாறு கோரி மாத்தறையிலுள்ள சனத் ஜயசூரிய மைதானத்தில் நேற்று நடைபெற்ற மக்கள் பேரணியில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஐக்கிய தேசியக் கட்சிக்குள் பிளவு இல்லை. இன்னும் ஓரிரு நாட்களில் சர்ச்சைகளுக்கு முடிவு கட்டப்படும்.

அன்புக்குரிய தலைவர் ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாஸவின் பெயரை ஜனாதிபதி வேட்பாளராக முன்மொழிவார். அதனைச் சபாநாயகர் கரு ஜயசூரிய வழிமொழிவார்.

ராஜபக்ஷாக்களின் போலிப் பிரசாரங்களுக்கு ஏமாற வேண்டாம். கடந்த நான்காண்டுகளில் பல அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. பொருட்கள், சேவைகளின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளன.

சஜித்துக்காக திறைசேரியூடாக நிதி ஒதுக்கீடு செய்யும்போது அஞ்சவேண்டியதில்லை. அவர் களவாடமாட்டார். மக்களுக்கு உரிய வகையில் சேவைகள் சென்றடையும் – என்றார். (ஐ)

## மாகாண...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மனு மீதான விசாரணையை உயர் நீதிமன்றம் நேற்று நிறைவு செய்தது. மனு மீதான தனது வியாக்கியானம் ஜனாதிபதிக்கு விரைவில் அனுப்பிவைக்கப்படும் என்று உயர் நீதிமன்றம் அறிவித்தது.

2017 ஆம் ஆண்டில் மாகாண சபைகள் திருத்தச் சட்டம் நிறைவேற்றப்படுவதற்கு முன்னர் இருந்த, விகிதாசார பிரதிநிதித்துவ முறையில், மாகாண சபை தேர்தல்களை நடத்த முடியுமா என்று, அறிவிக்குமாறு, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உயர் நீதிமன்றிடம் கோரியிருந்தார்.

ஜனாதிபதியின் இந்த மனுத் தொடர்பாக நேற்று உயர் நீதிமன்ற நீதியரசர்கள் அமர்வு கூடியது. அதன்போது சட்ட மா அதிபர் உள்பட சட்டவாளர்கள் தமது சமர்ப்பணங்களை முன்வைத்தனர்.

அவற்றை ஏற்றுக்கொண்ட உயர் நீதிமன்றம், தனது வியாக்கியானத்தை ஜனாதிபதிக்கு அனுப்பிவைப்பதாக அறிவித்தது.

ஜனாதிபதியின் கோரிக்கை தொடர்பாக ஆராய்ந்து, உயர் நீதிமன்றம் தனது கருத்தை ஓகஸ்ட் 30 ஆம் திகதிக்கு முன்னர் ஜனாதிபதிக்கு அனுப்பும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

வரும் நவம்பர் மாதம் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கு முன்னர், மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்துவதற்கு ஜனாதிபதி திட்டமிட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# கோட்டாவை விரைவில் சந்திக்கின்றார் சம்பந்தன்!

## அநுரகுமாரவுடனும் பேச முடிவு



கொழும்பு, ஓக. 24
ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான கூட்டு எதிரணியின் ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷவுக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனுக்குமிடையில் விரைவில் சந்திப்பு நடைபெறவுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் சகல வேட்பாளர்களுடனும் கூட்டமைப்பின் நாடாளுமன்றக்குழு தனித்தனியே பேச்சுகளை நடத்துவதற்குத் திட்டமிட்டுள்ளது. இதன் ஓர் அங்கமாகவே கோட்டாவுடனான சந்திப்பு இடம்பெறவுள்ளது.

அத்துடன், தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுர குமார திஸாநாயக்கவுடனும் கூட்டமைப்பு கலந்துரையாடவுள்ளது.

சஜித் பிரேமதாஸவுடன் கடந்த புதன் இரவு நடைபெற்ற சந்திப்பின்போது மேற்படி தகவலைச் சம்பந்தன் வெளியிட்டுள்ளார்.

அதேவேளை, ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் ஆராய்வதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக் குழு, நாடாளுமன்றக் குழு ஆகியன கூடவுள்ளன.

ஐக்கிய தேசியக் கட்சி ஜனாதிபதி வேட்பாளரை அதிகாரபூர்வமாக அறிவித்த பின்னரே மேற்படி பேச்சுகள் ஆரம்பமாகும் என அறிய முடிகின்றது.

ஜனாதிபதி தேர்தலில் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு கூட்டமைப்பு ஆதரவு வழங்காது என்ற போதிலும் மரியாதை நிமித்தமேனும் சந்தித்தாகவேண்டும், கோரிக்கைகளை முன்வைக்கவேண்டும் என்ற நோக்கிலேயே கோட்டாவை, சம்பந்தன் சந்திப்பார் எனக் கூட்டமைப்பு எம்.பியொருவர் தெரிவித்தார். (ஐ)

## வைத்தியர் சிவரூபனின் கைதை கண்டித்து நேற்றும் போராட்டம்

யாழ்ப்பாணம், ஓக. 24
கடந்த ஞாயிற்றுக்கிழமை பளை வைத்தியசாலையின் பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்தியர் சின்னராசா சிவரூபன் கைது செய்யப்பட்டமையைக் கண்டித்தும் அவரை விடுதலை செய்யக் கோரியும் பளையில் நேற்றும் ஆர்ப்பாட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டது.

பளை பிரதேச வைத்தியசாலையின் நோயாளர் நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் இந்த ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டது. பளை வைத்தியசாலை முன்றலில் ஆரம்பிக்கப்பட்ட இந்தக் கண்டன ஆர்ப்பாட்டம் பிரதேச செயலகம் வரை சென்றடைந்து அங்கு ஜனாதிபதிக்கான மகஜர் பிரதேச செயலக அதிகாரியிடம் கையளிக்கப்பட்டது. (ஐ)




## கீத் நொயர் கடத்தல் வழக்கில் படைப் புலனாய்வாளர் கைது

கொழும்பு, ஓக. 24
2008 ஆம் ஆண்டில் ஊடகவியலாளர் கீத் நொயர் கடத்தப்பட்டு தாக்கப்பட்ட வழக்கில் இராணுவப் புலனாய்வு அதிகாரி சார்ஜன்ட் சாமிதா சுமித் குமார கைது செய்யப்பட்டுள்ளார்.

சட்டமா அதிபர் தப்புலா டி லிவேரா அளித்த அறிவுறுத்தல்களின்படி இந்தக் கைது இடம்பெற்றது என்று சட்டமா அதிபர் திணைக்கள ஒருங்கிணைப்புச் செயலாளர் அரச வழக்கறிஞர் நிஷாரா ஜெயரத்ன தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் குற்றவியல் புலனாய்வுத் துறை கீத் நொயார் கடத்தப்பட்டமை உள்ளிட்ட ஆறு உயர்வழக்குகள் தொடர்பான அறிக்கையை சட்டமா அதிபர் திணைக்களத்துக்குச் சமர்ப்பித்தது.

பொலிஸ் பேச்சாளர் ருவான் குணசேகர நேற்றுமுன்தினம் செய்தியாளர்களிடம் பேசுகையில், பத்திரிகையாளரைக் கடத்தி தாக்கியமை தொடர்பான விசாரணைகள் அடுத்த இரண்டு மாதங்களுக்குள் முடிக்கப்படலாம் – என்றார். (ஐ)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிரஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 24.08.2019 இல் வெளியிடப்பெற்றது.